# கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை

## கைத்தறி மற்றும் துணிநூல்

# கொள்கை விளக்கக் குறிப்பு

**2010 – 2011**

மானியக் கோரிக்கை எண்.17

**கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன்**
பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2010

**2010 – 2011 ஆண்டுக்கான கொள்கை விளக்கக் குறிப்பு**
**கைத்தறி மற்றும் துணிநூல்**
**அட்டவணை**

| வ. எண் | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| 1 | முன்னுரை | 1 - 2 |
| 2 | ஜவுளித் தொழிலில் தமிழகம் | 2 – 7 |
| 3 | கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் முதன்மை நோக்கங்கள் | 7 – 10 |
| 4 | வளர்ச்சி மற்றும் நலத்திட்டங்கள் – கைத்தறித் தொழில் | 10 – 43 |
| 5 | துறை மேற்கொண்டுவரும் இதர நடவடிக்கைகள் | 43 – 56 |
| 6 | விசைத்தறித் தொழில் | 56 – 63 |
| 7 | 2010 – 2011 ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டங்கள் | 64 – 65 |
| 8 | கூட்டுறவு நூற்பாலைகள் | 65 – 66 |
| 9 | தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் லிமிடெட் (கோ–ஆப்டெக்ஸ்) | 67 – 75 |
| 10 | தமிழ்நாடு சரிகை ஆலை காஞ்சிபுரம் | 75 – 78 |
| 11 | தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் | 78 – 79 |
| 12 | தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் | 80 - 81 |
| 13 | தமிழ்நாடு கூட்டுறவுத் துணிநூல் பதனிடும் ஆலை | 81 – 83 |
| 14 | தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலைகளின் இணையம் (டான்ஸ்பின்) | 83 – 84 |
| 15 | 2010 – 2011 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட ஒதுக்கீடு | 85 – 87 |

**கைத்தறி மற்றும் துணிநூல்**

**2010-2011 ஆம் ஆண்டிற்கான**

**கொள்கை விளக்கக் குறிப்பு**

## 1. முன்னுரை

இந்தியத் திருநாட்டின் பொருளாதாரத்தில் ஜவுளித்தொழில் முக்கிய பங்கு வகிக்கிறது. தனி மனித வாழ்க்கைக்குத் தேவைப்படும் அடிப்படைத் தேவைகளை ஜவுளித் துறை பூர்த்தி செய்வதுடன், தொழில் உற்பத்தி, வேலை வாய்ப்பு உருவாக்குதல் மற்றும் அந்நியச் செலாவணி ஈட்டுதல் போன்ற இனங்களில் இத்துறை மிக முக்கிய பங்கு வகிக்கிறது. ஜவுளித் துறை நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 4 விழுக்காடாக அமைந்து, நாட்டின் ஏற்றுமதி வருவாயில் 12 விழுக்காட்டிற்கு வழி வகுத்துள்ளது. மேலும், 3.50 கோடி நபர்களுக்கு ஜவுளித் தொழிலின் மூலம் நேரடி வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது. ஆகவே ஜவுளித் துறையின் ஒருமித்த வளர்ச்சி, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு மிகவும் இன்றியமையாததாகும்.



ஜவுளித் தொழில், உற்பத்தி பிரிவுகளான நூல், நெசவு, பின்னலாடை மற்றும் ஆயத்த ஆடை பிரிவுகளையும் மூலப்பொருள் மற்றும் ஜவுளி விற்பனை ஆகிய விநியோக பிரிவுகளையும் இயந்திர சாமான்கள், உதிரி பாகங்கள், இரசாயனம் மற்றும் சாயப் பொருட்கள் உற்பத்தி போன்ற ஜவுளித் தொழிலைச் சார்ந்த உபத் தொழில்களையும் உள்ளடக்கியதாகும்.

## 2. ஜவுளித் தொழிலில் தமிழகம்

இந்திய ஜவுளித் துறை வரலாற்றில் இத்தொழிலின் பெரும்பாலான உட்பிரிவுகளில் தமிழ்நாடு ஒரு சிறப்புமிக்க மாநிலமாகத் திகழ்ந்து வருகிறது. நாட்டின் மொத்த ஜவுளி உற்பத்தியில், மூன்றில் ஒரு பங்கிற்கு மேல் தமிழ்நாட்டின் பங்களிப்பாகும். தமிழக ஜவுளித் துறையில், பருத்தி சார்ந்த உற்பத்தி முக்கிய பங்கு வகிக்கிறது. தமிழ்நாட்டின் ஜவுளி உற்பத்திகளில், காஞ்சிபுரம் பட்டு சேலைகள், பவானி ஜமுக்காளம், மதுரை சுங்குடி சேலைகள், கோயமுத்தூர் கோரா சேலைகள், பரமக்குடி சேலைகள், சேலம் பட்டு வேட்டிகள், ஈரோடு மற்றும் கரூர் வீட்டு உபயோக ஜவுளி இரகங்கள், திருப்பூர் பின்னலாடைகள் போன்றவை, அவற்றின் நெசவுத் தன்மைக்கும் திறன் வாய்ந்த நுண்

வேலைப்பாடுகளுக்கும் உலகளவில் அங்கீகாரம் பெற்றவை. நம் மாநிலத்தில் ஜவுளித் துறையின் மூலம் சுமார் 40 இலட்சம் மக்களுக்கு நேரடி வேலைவாய்ப்பு கிடைக்கின்றது.

### 2.1 நூற்புத் தொழில்

தமிழ்நாட்டின் தொழில் துறை வளர்ச்சிக்கு நூற்பாலைகள் முதுகெலும்பாக திகழ்கின்றன. தமிழ்நாட்டின் நூற்புத் தொழில், நவீன தொழில்நுட்ப முறைகளை பயன்படுத்தி முன்னிலையில் காணப்படுகிறது. நூற்பு கதிர்களின் எண்ணிக்கையிலும், நூல் உற்பத்தியிலும், நாட்டில் முதலிடத்தை தமிழ்நாடு பெற்றுள்ளது. இந்தியாவிலுள்ள 3102 நூற்பாலைகளில், தமிழ்நாட்டில் மட்டும் 1931 நூற்பாலைகள் உள்ளன. இவற்றில் 2.58 இலட்சம் தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். 2009–2010 ஆம் ஆண்டில், தமிழ்நாட்டின் நூல் உற்பத்தியான சுமார் 1660 மில்லியன் கிலோ கிராம், நாட்டின் மொத்த உற்பத்தியான 4150 மில்லியன் கிலோ கிராம் அளவில் 40 விழுக்காடு ஆகும்.

### 2.2 கைத்தறி நெசவுத் தொழில்

மிகவும் தொன்மை வாய்ந்த திறன்மிக்க நேர்த்தியான வேலைப்பாடுகளுக்கு பெயர் பெற்ற கைத்தறி நெசவுத் தொழிலானது, மாநிலத்தின் பாரம்பரியத்திற்கு பெருமை



சேர்ப்பதுடன், மொத்த ஜவுளி உற்பத்தியிலும் முக்கிய பங்கு வகிக்கிறது. தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் கைத்தறி நெசவு இரகங்களான பட்டு சேலைகள், பருத்தி சேலைகள், வீட்டு உபயோக ஜவுளி இரகங்கள், வேட்டிகள், லுங்கிகள், துண்டுகள் முதலியன தனித்தன்மை பெற்று விளங்குகின்றன. இந்தியாவில் உள்ள 34.86 இலட்சம் கைத்தறிகளில், தமிழ்நாட்டில் மட்டும் சுமார் 4.13 இலட்சம் கைத்தறிகள் உள்ளன. இதன் மூலம் சுமார் 6.08 இலட்சம் நெசவாளர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கிறது. நாட்டின் மொத்த கைத்தறி துணி உற்பத்தியான 6677 மில்லியன் சதுர மீட்டரில், 12.30 விழுக்காடான 821 மில்லியன் சதுர மீட்டர் துணி தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகிறது.

தமிழ்நாட்டில் 1175 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. 2.32 இலட்சம் நெசவாளர்கள் இச்சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ளனர். மாநிலத்தில், மொத்த கைத்தறி ஜவுளி விற்பனையான ரூ.1650.00 கோடியில், கூட்டுறவு அமைப்பின் மூலம் ரூ.911.25 கோடி அளவிற்கு ஜவுளி பொருட்கள் விற்பனையாகின்றன.

நாடு சுதந்திரம் அடைந்ததிலிருந்து கைத்தறி தொழிலின் வளர்ச்சியை ஊக்குவிப்பதைக் கொள்கையாகக் கொண்டு, மைய மற்றும் மாநில அரசுகள் இத்துறைக்கென

பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றன. இத்திட்டங்களின் மூலம் கைத்தறி ஜவுளி உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரித்து, கைத்தறி நெசவாளர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்திட சீரிய முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 2.3 விசைத்தறி நெசவுத் தொழில்

தமிழ்நாட்டின் ஜவுளித் தொழிலில் விசைத்தறி உற்பத்தி மிக முக்கிய பங்கு வகிக்கிறது . தேசிய அளவிலான விசைத்தறிகளின் மொத்த எண்ணிக்கையில் தமிழ்நாடு இரண்டாம் இடத்தை வகிக்கிறது. இந்தியாவில் பதிவு செய்யப்பட்ட 22.24 இலட்சம் விசைத்தறிகளில், தமிழ்நாட்டில் மட்டும் 4.46 இலட்சம் விசைத்தறிகள் உள்ளன. விசைத்தறித் தொழிலில் 11.16 இலட்சம் தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர். நாட்டின் விசைத்தறி பிரிவின் கீழான மொத்த ஜவுளி உற்பத்தி 54,000 மில்லியன் சதுர மீட்டர் ஆகும். இதில், தமிழ்நாட்டின் பங்களிப்பு மட்டும் 10,800 மில்லியன் சதுர மீட்டராகும். சர்வதேச சந்தையை மையமாகக் கொண்டு செயல்படும் ஆயத்த ஆடைகள் மற்றும் வீட்டு உபயோக ஜவுளி இரகங்கள் தயாரிக்கும் நிறுவனங்கள்,



தங்களின் துணித் தேவைக்கு பெரும்பாலும் விசைத்தறிப் பிரிவினையே சார்ந்துள்ளன.

## 2.4 பதனிடும் தொழில்

ஜவுளி இரகங்களுக்கு மதிப்பு கூட்டி, இறுதி வடிவம் கொடுப்பதில், நெசவுக்கு முன் மற்றும் நெசவுக்குப் பிந்தைய நிலைகளில், நூல் மற்றும் துணிகளில் செய்யப்படும் பதனிடும் பணிகள் முக்கிய பங்கு வகிக்கிறது. இந்தியாவிலுள்ள 10397 கையால் இயக்கப்படும் பதனிடும் கூடங்களில், 2614 பதனிடும் கூடங்கள் தமிழகத்தில் உள்ளன. மேலும், நாட்டிலுள்ள 2510 விசையால் இயக்கப்படும் பதனிடும் கூடங்களில், 985 பதனிடும் கூடங்கள் தமிழகத்தில் அமைந்துள்ளன. தற்சமயம், சுற்றுச் சூழலை பாதிக்கா வண்ணம், நவீன தொழில்நுட்ப உத்திகளை பயன்படுத்தி, மாசுக் கட்டுப்பாடு வாரியம் விதித்துள்ள வரைமுறைகளை பின்பற்றுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 2.5 பின்னலாடை மற்றும் ஆயத்த ஆடைத் தொழில்

ஜவுளித் தொழிலின் பல்வேறு நிலைகளில்,

பின்னலாடை மற்றும் ஆயத்த ஆடை பிரிவே இறுதி நிலையாகும். இப்பிரிவில் தான் அதிகபட்சமான மதிப்பு கூட்டும் பணிகள் நடைபெறுகின்றன. ஏற்றுமதியினை சார்ந்துள்ள இப்பிரிவு, உள்நாட்டு சந்தை மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட சில்லறை வர்த்தகத்திலும் வெகுவாக வளர்ச்சி கண்டுள்ளது. திருப்பூர் பகுதி பின்னலாடை தொழிலுக்கும் சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதிகள், ஆயத்த ஆடை தொழிலுக்கும் மையமாக விளங்கி வருகின்றன. இத்தொழிலில் கிராமப்புற மக்களுக்கு, குறிப்பாக மகளிருக்கு அதிக அளவில் வேலைவாய்ப்புகள் வழங்க வழிவகைகள் ஏற்பட்டுத்தப்பட்டுள்ளன.

## 3. கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் முதன்மை நோக்கங்கள்

(i) கைத்தறி, விசைத்தறி மற்றும் துணிநூல் பிரிவுகளின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்காக செயல்படுவது

மற்றும்

(ii) அனைத்துப் பிரிவுகளின் நலனுக்காகவும் குறிப்பாக, நெசவாளர்கள் மற்றும் ஜவுளித்



தொழிலாளர்களின் நலனுக்காகப் பாடுபடுவது முதலியன ஆகும்.

நெசவாளர்களின் சமூக, பொருளாதார, வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்குடன் அவர்களின் நலனுக்கென உருவாக்கப்பட்ட பல்வேறு நலத் திட்டங்களையும், வளர்ச்சித் திட்டங்களையும் செயல்படுத்தும் பணியினை கைத்தறி மற்றும் துணிநூல் துறை மேற்கொண்டு வருகிறது. இத்தொழிலுக்குத் தேவையான மூலப் பொருட்களை கிடைக்கச் செய்வதும், நூல் மற்றும் துணியினை நியாயமான விலையில் உற்பத்தி செய்வதுடன், உற்பத்தி செய்யப்பட்ட துணிவகைகளின் விற்பனையினை மேம்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதும் துறையின் பொறுப்புகளாகும். நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரை, தேவையான நூல் மற்றும் இதர மூலப்பொருட்களை விநியோகிப்பதும், உற்பத்தி செய்யப்பட்ட துணிவகைகளை கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் மூலமும், லூம்வேர்ல்டு விற்பனை நிலையங்கள், சங்கத்தின் சொந்த விற்பனை நிலையங்கள் மற்றும் மாநிலத்திலுள்ள மற்றும் மாநிலத்திற்கு வெளியே உள்ள இதர விற்பனை நிலையங்கள் மூலமும், விற்பனை

செய்யத் தேவையான நடவடிக்கைகளையும் இத்துறை மேற்கொண்டு வருகிறது.

கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள பல்வேறு நிறுவனங்களின் விவரம் பின்வருமாறு:-

1. 1175 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்
2. 185 விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்
3. 18 கூட்டுறவு நூற்பாலைகள் (அண்ணா (தேனி), பாரதி (தூத்துக்குடி), புதுக்கோட்டை, கன்னியாகுமரி மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய 5 கூட்டுறவு நூற்பாலைகள் தற்சமயம் இயங்கி வருகின்றன)
4. தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் (கோ–ஆப்டெக்ஸ்), சென்னை
5. தமிழ்நாடு சரிகை நிறுவனம், காஞ்சிபுரம்
6. தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம், சென்னை
7. தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை, ஈரோடு
8. தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம், கோயம்புத்தூர்
9. தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலைகளின் இணையம், சென்னை.

தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம், 1983



மற்றும் 1988ஆம் வருடத்திய விதிகளின்கீழ் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதன் அடிப்படையில், மாநிலத்தில் உள்ள கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், துறையின்கீழ் இயங்கும் இதர கூட்டுறவு அமைப்புகளுக்கும் செயற்பதிவாளராக கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் செயல்பட்டு வருகிறார். நூற்பாலைகள், துணிநூல் ஆலைகள், பதனிடும் ஆலைகள், பின்னலாடை, கைத்தறி மற்றும் விசைத்தறிப் பிரிவுகளுக்கு " மாநில துணிநூல் அதிகாரி " யாகவும் இயக்குநர் செயல்படுகிறார். மாநிலத்திலுள்ள 18 சரக கைத்தறி மற்றும் துணிநூல் துணை இயக்குநர்கள் / உதவி இயக்குநர்கள் மூலமாக சரக அளவில் நெசவாளர்களுக்கான பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

## 4. வளர்ச்சி மற்றும் நலத் திட்டங்கள்

### கைத்தறித் தொழில்

### 4.01 இலவச வேட்டிகள் மற்றும் சேலைகள் வழங்கும் திட்டம்

கிராமப்புற மற்றும் நகர்ப்புற ஏழை மக்களுக்கு இலவச வேட்டிகள் மற்றும் சேலைகள் வழங்கும் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படுகிறது. 2009–2010 ஆம் ஆண்டில் ரூ.256.00 கோடி நிதி ஒதுக்கீட்டைக் கொண்டு இத்திட்டம்

செயல்படுத்தப்பட்டது.

இத்திட்டத்திற்குத் தேவையான வேட்டிகள் மற்றும் சேலைகள் அனைத்தும் மாநிலத்திலுள்ள கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் உற்பத்தி செய்யப்படுகின்றன. இத்திட்டம் கூட்டுறவு அமைப்பின் கீழ் உள்ள 230 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலுள்ள 13000 கைத்தறி நெசவாளர்கள் மற்றும் 133 விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலுள்ள 35000 விசைத்தறி தொழிலாளர்களுக்கு தொடர்ந்து வேலைவாய்ப்பு வழங்குவதோடு மட்டுமல்லாமல், தமிழ்நாட்டிலுள்ள 3.18 கோடி கிராமப்புற மற்றும் நகர்ப்புற ஏழை மக்களுக்குப் பயனளிக்கும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பொங்கல் 2010 இலவச வேட்டி சேலைகளின் விநியோகம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 01.01.2010 அன்று சென்னையில் தொடங்கி வைக்கப்பட்டு மாநிலம் முழுவதும் விநியோகம் செய்யப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் பொங்கல் 2010 பண்டிகைக்கு 158.64 இலட்சம் வேட்டிகளும், 158.96 இலட்சம் சேலைகளும் உற்பத்தி செய்து உரிய நேரத்தில் வழங்கப்பட்டன.

இலவச வேட்டி சேலை திட்டம் 2010–2011ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.



இத்திட்டத்தினை செயல் படுத்துவதற்காக 2010–2011 ஆம் ஆண்டுக்கான வரவு–செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ. 256.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், ஒவ்வொரு ஆண்டும் தீபாவளி மற்றும் பொங்கல் பண்டிகையின்போது முதியோர் ஓய்வூதியம் பெறுவோர்க்கு இலவசமாக வேட்டிகளும், சேலைகளும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் உற்பத்தி செய்து வழங்கப்பட்டு வருகின்றன. 2009–2010 ஆம் ஆண்டில் ரூ.38.95 கோடி மதிப்புள்ள 7.47 இலட்சம் வேட்டிகளும், 26.14 இலட்சம் சேலைகளும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் உற்பத்தி செய்து வழங்கப்பட்டன. 2010–2011 ஆம் ஆண்டிலும் முதியோர் ஓய்வூதியம் பெறுவோர்க்கு இலவசமாக வழங்குவதற்குத் தேவையான வேட்டிகள் மற்றும் சேலைகள் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் உற்பத்தி செய்து வழங்கப்படும்.

### 4.02 பள்ளிச் சிறார்களுக்கு இலவச சீருடைகள் வழங்கும் திட்டம்

ஒன்றாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை கல்வி பயின்று, சத்துணவுத் திட்டத்தின் கீழ் பயன்பெறும் பள்ளிச் சிறார்களுக்கு இலவச சீருடைகள் வழங்கும் திட்டம்

தமிழ்நாடு அரசால் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்குத் தேவைப்படும் காக்கித் துணி, நீல இரக துணி, நீல தாவணி, வெள்ளை சட்டை ஆகிய சீருடைத்துணி வகைகள் அனைத்தும் கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களால் உற்பத்தி செய்து வழங்கப்படுகின்றன. 2009–2010ஆம் கல்வியாண்டிற்கு ரூ 42.90 கோடி மதிப்புள்ள 124.46 இலட்சம் மீட்டர் சீருடைத்துணிகள் உற்பத்தி செய்யப்பட்டு சமூக நலத்துறைக்கு வழங்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் 53,63,597 மாணவ மாணவியர் பயன்பெற்றனர்.

இதுதவிர, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலம், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைகளுக்குத் தேவைப்படும் பேண்ட், கோடிட்ட சட்டைகள், சுடிதார் பேண்ட், சுடிதார் துப்பட்டா போன்ற சீருடைத்துணிகள் ரூ. 15.28 கோடி மதிப்பில் 25.03 இலட்சம் மீட்டர் அளவிற்கு கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் 2009–2010 ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்டு 3,32,164 மாணவ மாணவியர் பயன்பெறும் வகையில் வழங்கப்பட்டது.

2010–2011 ஆம் ஆண்டிலும் பள்ளிச் சிறார்களுக்கு



இலவச சீருடை வழங்கும் திட்டத்தின் கீழ் சமூக நலத்துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலம், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைகளுக்குத் தேவைப்படும் சீருடைத்துணிகள் அனைத்தும் கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் உற்பத்தி செய்து வழங்கப்படும்.

**4.03 கைத்தறி நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டம்**

கைத்தறி நெசவாளர்கள் சொந்தமாக தறிக்கூடம் வைத்திருந்து தாமே நெசவுத் தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு இருமாதங்களுக்கு ஒருமுறை 100 யூனிட்டுகள் வரை இலவசமாக மின்சாரம் வழங்கப்படும் என 2006–2007 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டவாறு, கைத்தறி நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டம் 01.08.2006 முதல் தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் தறிக்கூடம் வைத்துள்ள 1,52,538 கைத்தறி நெசவாளர்கள் பயன் அடைந்து வருகின்றனர். கைத்தறி நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம் வழங்கும் இத்திட்டம் 2010–2011 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இதற்கென 2010–2011 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட

மதிப்பீட்டில் ரூ. 11.20 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 4.04 தள்ளுபடி மானியத் திட்டம்

கைத்தறித் துணிகளின் விற்பனையினை அதிகரிக்கும் பொருட்டு அரசு தள்ளுபடி மானியம் வழங்கும் திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம் ஆலைத் துணிகளுடன் போட்டியிட்டு, கைத்தறி துணிகளை சந்தையில் விற்பனை செய்ய உதவிகரமாக உள்ளதோடு, பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனங்களின் துணித் தேக்கத்தினை குறைக்கவும், கைத்தறித் தொழிலை விசைத்தறி மற்றும் ஆலைத் தொழில்களால் ஏற்படும் போட்டியிலிருந்து பாதுகாக்கவும் உதவுகிறது.

பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கோஆப்டெக்ஸ் நிறுவனத்தில் விற்பனை செய்யப்படும் கைத்தறித் துணிகளின் சில்லறை மற்றும் மொத்த விற்பனைக்கு, ஆண்டு முழுவதும் 20 விழுக்காடு தள்ளுபடி மானியம் மாநில அரசால் வழங்கப்பட்டு வருகிறது. பருத்தி இரகங்களுக்கு, உருப்படி ஒன்றுக்கு 20 விழுக்காடு அல்லது ரூ.100/– இதில் எது குறைவோ, பட்டு துணிகளுக்கு உருப்படி ஒன்றுக்கு 20 விழுக்காடு அல்லது ரூ.200/– இதில்



எது குறைவோ, தள்ளுபடி மானியமாக வழங்கப்பட்டு வருகிறது. இதுதவிர, பேரறிஞர் அண்ணா பிறந்த நாளை முன்னிட்டு 15.09.2009 முதல் 31.01.2010 முடிய உள்ள 139 நாட்களுக்கு வழக்கமாக வழங்கப்படும் 20 விழுக்காடு தள்ளுபடியுடன் கூடுதலாக 10 விழுக்காடு சிறப்பு தள்ளுபடியும் சேர்த்து 30 விழுக்காடு தள்ளுபடி வழங்கப்பட்டது. இச்சிறப்பு தள்ளுபடி திட்டத்தின் கீழ், பருத்தி துணி இரகங்களுக்கு உருப்படி ஒன்றுக்கு 30 விழுக்காடு அல்லது ரூ.150/– இதில் எது குறைவோ, பட்டு துணி இரகங்களுக்கு உருப்படி ஒன்றுக்கு 30 விழுக்காடு அல்லது ரூ.300/– இதில் எது குறைவோ தள்ளுபடியாக வழங்கி விற்பனை செய்ய அனுமதி வழங்கப்பட்டது.

மேலும், பட்டு துணிகளின் விற்பனையினை அதிகரித்து, சரக்குத் தேக்கத்தினை கணிசமாக குறைக்கும் பொருட்டு, பொங்கல் பண்டிகை மற்றும் முக்கிய திருமண மாதமான தை திங்களை முன்னிட்டு, 12.01.2010 முதல் 31.01.2010 வரை கோ–ஆப்டெக்ஸ் மற்றும் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களால் மேற்கொள்ளப்பட்ட பட்டு துணிகளின் விற்பனைக்கு உச்சவரம்பின்றி நேரடியாக 10 விழுக்காடு சிறப்பு தள்ளுபடி வழங்கப்பட்டது. இச்சிறப்பு தள்ளுபடி காலத்தில் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் ரூ.15.93 கோடிக்கு பட்டு

துணிகளை விற்பனை செய்துள்ளன.

கைத்தறித் துணிகளை சந்தையில் எளிதில் விற்பனை செய்ய ஏதுவாக கைத்தறித் துணிகளின் விற்பனைக்கு ஒருங்கிணைந்த கைத்தறி வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ''விற்பனை ஊக்குவிப்பு'' இனத்தின் கீழ் மைய அரசு தள்ளுபடி மானிய திட்டத்திற்கு தனது பங்கினை வழங்குகிறது. மைய அரசு **2009–2010** ஆம் ஆண்டில், விற்பனை ஊக்குவிப்பு தொகையாக ரூ.**36.98** கோடி மாநில அரசிற்கு வழங்கியுள்ளது. மாநில அரசு **2009–2010** ஆம் ஆண்டில் தள்ளுபடி மானிய திட்டத்திற்காக ரூ.**118.00** கோடி வழங்கியுள்ளது. இத்தகைய தள்ளுபடி மானியத் திட்டங்களின் உதவியுடன் எந்த ஆண்டும் இல்லாத அளவிற்கு ரூ.**983.56** கோடி கைத்தறி துணிகள் **2009**-2010 ஆம் ஆண்டில் விற்பனை செய்யப்பட்டன.

தள்ளுபடி மானிய திட்டம், **2010–2011** ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இதற்கென **2010–2011** ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.**118.00** கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.05 வட்டி மானிய திட்டம்**



கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலம் நடைமுறை மூலதனம் பெற்று வருகின்றன. மேற்படி நடைமுறை மூலதனத்திற்கு வங்கிகளால் வசூலிக்கப்படும் வட்டி சுமையினை குறைக்கும் பொருட்டு **3** விழுக்காடு வட்டி மானியம் வழங்கும் திட்டம் தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்டு வந்தது. இத்திட்டம் **01.10.2002** முதல் கைவிடப்பட்டது.

கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் வட்டிச் சுமையை குறைக்கும் நோக்கத்துடன், அச்சங்கங்கள், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளின் மூலம் பெறப்படும் நடைமுறை மூலதனத்திற்கு வங்கிகளால் வசூலிக்கப்படும் வட்டி விகிதத்தில் **4** விழுக்காடு வட்டித் தொகையினை மானியமாக வழங்கும் திட்டத்தினை இந்த அரசு **01.04.2008** முதல் செயல்படுத்தி வருகிறது. கைத்தறி நெசவாளர்களுக்கு வட்டி மானியம் மீண்டும் கிடைப்பதனால், அவர்களது உற்பத்திச் செலவு பெரிதளவு குறைந்துவிடுகின்றது.

**2008–2009** ஆம் ஆண்டில் வட்டி மானியமாக ரூ.**4.70** கோடி அரசால் வழங்கப்பட்டுள்ளது. **2009–2010** ஆம் ஆண்டில் இதுவரை ரூ. **12.66** கோடி வட்டி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

வட்டி மானியத் திட்டம் 2010–2011 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்கென 2010–2011 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.13.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.06 ஒருங்கிணைந்த கைத்தறி வளர்ச்சித் திட்டம்**

கைத்தறி நெசவாளர்களின் நலனைக் கருத்திற்கொண்டும், கைத்தறித் தொழிலை மேம்படுத்திடவும், "ஒருங்கிணைந்த கைத்தறி வளர்ச்சித் திட்டம்" 11–வது ஐந்தாண்டுத் திட்டத்தில் மைய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டதை தொடர்ந்து, இத்திட்டத்தில் மாநில அரசும் தனது பங்கினை வழங்கி இத்திட்டத்தினை 2007–2008 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது.

ஒருங்கிணைந்த கைத்தறி வளர்ச்சித் திட்டத்தில் கீழ்க்கண்ட 4 முக்கிய இனங்கள் உள்ளன:-

(i) கைத்தறி குழும வளர்ச்சி திட்டம் (Cluster Development Programme)

(ii) கைத்தறி வளர்ச்சிக்கான குழு அணுகுமுறை (Group Approach for Development of Handlooms)

(iii) கைத்தறி நிறுவனங்களுக்கு நிதியுதவி (Aassistance for Handloom Organisations)



(iv) புதிய யுத்திகள், விளம்பரம், மேற்பார்வை, கண்காணிப்பு, பயிற்சி மற்றும் திட்டத்தினை மதிப்பீடு செய்தல் ஆகிய பல்வேறு இனங்களுக்கு உதவித்தொகை (Assistance for Innovative Ideas and Publicity, Monitoring, Supervision, Training and Evaluation of Scheme)

**(i) கைத்தறி குழும வளர்ச்சித் திட்டம் (Handloom Cluster Development Programme)**

கைத்தறி குழும வளர்ச்சி திட்டமானது நெசவாளர்களை ஒரு குழுவாக அமைத்து அவர்களை முன்னேற்றும் நோக்கத்துடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், சுமார் 300 முதல் 500 தறிகள் கொண்ட கைத்தறி குழும பகுதிகளை மேம்படுத்த மைய மற்றும் மாநில அரசின் மூலம் நிதி உதவி வழங்கப்படுகிறது. தமிழ் நாட்டில் திருச்சி, திருவண்ணாமலை மற்றும் குறிஞ்சிப்பாடி ஆகிய பகுதிகளில் மூன்று கைத்தறி குழுமங்கள் மொத்தம் ரூ.6.00 கோடி மதிப்பீட்டில், ஒவ்வொரு குழுமத்திற்கும் ரூ.2.00 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், 37 பகுதிகளில் சிறிய கைத்தறி குழுமங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் கீழ், 3

ஆண்டு காலத்திற்கு தறி மேம்பாடு, தறி மற்றும் தறி உபகரணங்கள் வழங்குதல், சாயச்சாலை உருவாக்குதல், பொது வசதி மையம் அமைத்தல், காட்சியறை நிறுவுதல், பொருட்காட்சி நடத்துதல், விளம்பரம் மற்றும் வடிவமைப்பு ஆகிய பல்வேறு இனங்களுக்கு ஒவ்வொரு குழுமத்திற்கும் அதிகபட்சமாக ரூ.**60.00** இலட்சம் வரை நிதியுதவி வழங்கப்படுகிறது.

கைத்தறி குழும வளர்ச்சி திட்டத்தின் பல்வேறு இனங்களுக்கு வழங்கப்படும் நிதியுதவியின் விவரம் பின்வருமாறு:—

| வ. எண் | இனங்கள் | ஒரு கைத்தறி குழுமத்திற்கான நிதியுதவி |
|---|---|---|
| 1 | அடிப்படை ஆய்வு, கூர்ந்தாய்வு அறிக்கை தயாரித்தல், சுய உதவிக் குழுக்கள் அமைத்தல் | ரூ. 1.25 இலட்சம் — ஒருமுறை |
| 2 | கூட்டமைப்பு உருவாக்கம் | ரூ.50,000/— — ஒருமுறை |
| 3 | நூல் கிடங்குகளுக்கான தொகுப்பு நிதி | ரூ.3.00 இலட்சம் — ஒருமுறை |
| 4 | வடிவமைப்பு மேம்பாடு மற்றும் இரக மாற்றம் | ரூ.3.00 இலட்சம் கணினி மென்பொருள் மூலம் வடிவமைக்கப்பட்ட ஜவுளி வடிவமைப்புகளை கொள்முதல் செய்தல், வண்ணங்கள் மற்றும் சந்தை பற்றிய கணிப்பு — ஒருமுறை |



| | | |
|---|---|---|
| | | ரூ.6.00 இலட்சம் — 3 ஆண்டுகளுக்குவடிவமைப்பாளரை நியமித்தல் |

| | | |
|---|---|---|
| 5 | கட்டமைப்பு வசதிகள் / பொது வசதி மையம் (மொத்த திட்ட மதிப்பீட்டில் 50 விழுக்காடு என்ற உச்சவரம்புக்குட்பட்டு) | ரூ.30.00 இலட்சம் – ஒருமுறை |
| 6 | விளம்பரங்கள் (மொத்த திட்ட மதிப்பீட்டில் 20 விழுக்காடு என்ற உச்சவரம்புக்குட்பட்டு) | ரூ.50,000/– விளம்பரங்கள், கையேடுகள் சிற்றேடுகள் மற்றும் துண்டுச்சீட்டுகள் வெளியீடு – 3 வருடங்களுக்கு |
| | | ரூ.6.00 இலட்சம் 3 கண்காட்சிகள் –<br>3 வருடங்களுக்கு |
| | | ரூ.3.00 இலட்சம் வீதம் 6 வாங்குவோர் – விற்போர் சந்திப்பு கூட்டங்கள் நடத்துதல் –<br>3 வருடங்களுக்கு |
| | | ரூ.1.00 இலட்சம்<br>சந்தை நிலவர ஆய்வு – ஒருமுறை |
| | | ரூ.3.00 இலட்சம் நெசவாளர்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்த பல்வேறு பகுதிகளுக்கு அழைத்து செல்ல ஒரு நெசவாளருக்கு ரூ.3000/– வீதம் 3 வருடங்களுக்கு |
| | | ரூ.25,000/–<br>இணைய தள உருவாக்கத்திற்கென - ஒருமுறை |
| 7 | திட்ட மேலாண்மை செலவினம் | ரூ.7.20 இலட்சம்<br>ஒரு வருடத்திற்கு ரூ.2.40 இலட்சம் வீதம்<br>3 வருடங்களுக்கு |



கைத்தறி குழும வளர்ச்சித் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் 40 கைத்தறி குழுமங்களை மேம்படுத்த ரூ.27.66 கோடிக்கான திட்ட மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:-

**ஒருங்கிணைந்த கைத்தறி வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மைய அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ள கைத்தறி குழுமங்கள்**

(Handloom Clusters)

| வ. எண். | கைத்தறி குழுமத்தின் பெயர் | மாவட்டம் | திட்டத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி | 200.00 |
| 2. | திருவண்ணாமலை | திருவண்ணாமலை | 200.00 |
| 3. | குறிஞ்சிப்பாடி | கடலூர் | 200.00 |
| 4. | நிலையூர் | மதுரை | 59.70 |
| 5. | வீரவநல்லூர் | திருநெல்வேலி | 59.70 |
| 6. | பாதிரிவேடு | திருவள்ளூர் | 59.70 |
| 7. | ஜெயங்கொண்டம் | பெரம்பலூர் | 59.70 |
| 8. | கண்டாச்சிபுரம் | விழுப்புரம் | 59.70 |
| 9. | ஆப்பக்கூடல் | ஈரோடு | 59.70 |

| | | | |
|---|---|---|---|
| 10. | சோளிங்கர் | வேலூார் | 59.70 |
| 11. | சிறுமுகை | கோயம்புத்தூர் | 59.70 |
| 12. | தாண்டாம்பாளையம் | ஈரோடு | 59.70 |
| 13. | பழநி | திண்டுக்கல் | 59.70 |
| 14. | எமனேஸ்வரம் | இராமநாதபுரம் | 59.90 |
| 15. | வெங்கமேடு | கரூர் | 60.00 |
| 16. | எடப்பாடி | சேலம் | 52.60 |
| 17. | தாசப்பகவுண்டன்புதுார் | ஈரோடு | 59.08 |
| 18. | சென்னிமலை | ஈரோடு | 58.30 |
| 19. | பள்ளியாடி | கன்னியாகுமரி | 58.50 |
| 20. | திருப்பூர் | திருப்பூர் | 59.00 |
| 21. | புனல்வேலி | விருதுநகர் | 55.00 |
| 22. | திருபுவனம் | தஞ்சாவூர் | 58.10 |
| 23. | ஆட்டையாம்பட்டி | சேலம் | 59.99 |
| 24. | வண்டியூர் | மதுரை | 60.00 |
| 25. | சாயர்புரம் | தூத்துக்குடி | 59.00 |
| 26. | சின்னாளப்பட்டி | திண்டுக்கல் | 59.00 |
| 27. | குடியாத்தம் | வேலூார் | 60.00 |
| 28. | புதுப்பேட்டை | கடலூார் | 58.25 |



| | | | |
|---|---|---|---|
| 29. | பிள்ளையார்பாளையம் | காஞ்சிபுரம் | 56.00 |
| 30. | நடுவீரப்பட்டு | கடலூர் | 42.00 |
| 31. | அய்யம்பேட்டை | தஞ்சாவூர் | 60.00 |
| 32. | பரமத்தி வேலூர் | நாமக்கல் | 60.00 |
| 33. | பொள்ளாச்சி | கோயம்புத்தூர் | 59.75 |
| 34. | பரமக்குடி | இராமநாதபுரம் | 60.00 |
| 35. | செல்லூர் | மதுரை | 54.59 |
| 36. | ஸ்ரீவில்லிப்புத்தூர் | விருதுநகர் | 60.00 |
| 37. | தொட்டம்பாளையம் | ஈரோடு | 60.00 |
| 38. | எஸ்ஸேலம் | விழுப்புரம் | 60.00 |
| 39. | திருமால்பூர் | வேலூர் | 60.00 |
| 40. | தாதகாப்பட்டி | சேலம் | 60.00 |
| | | மொத்தம் | 2766.06 |

கைத்தறி குழும வளர்ச்சி திட்டத்தினை 2010–2011 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்த ஏதுவாக, 2010–2011 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.10.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**விருதுநகரில் மாபெரும் கைத்தறிக் குழுமம்**

விற்பனைச் சந்தையில் அதிகரித்து வரும் போட்டியினை கைத்தறி தொழிலானது எதிர்கொள்ள வேண்டியுள்ளது. ஆகவே, தரமான இரகங்களை உற்பத்தி செய்து விற்பனை செய்வதற்கு போதிய உட்கட்டமைப்பு வசதி, புதிய தொழில் நுட்ப அறிவுத் திறன் போன்றவை முக்கிய பங்கு வகிக்கின்றன. விற்பனைச் சந்தைக்கு ஏற்றவாறு 25000 கைத்தறி நெசவாளர்களை ஒரு குழுமமாக அமைத்து அவர்களின் செயல்திறன் மற்றும் திறமையினை மேம்படுத்தி நிலையான பொருளாதார வளர்ச்சியினை உருவாக்கும் வகையில் ஒரு விரிவான திட்டம் மத்திய அரசின் நிதியுதவியுடன் விருதுநகர் பகுதியில் ரூ.70.00 கோடி திட்ட மதிப்பீட்டில் செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. விருதுநகரில் அமைக்கப்பட்டுவரும் மாபெரும் கைத்தறிக் குழுமத்தில் நெசவாளர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்குதல், வடிவமைப்பு மேம்பாடு, இரகமாற்றம் செய்தல், பொது வசதி மையம், சாயச்சாலை அமைத்தல், விளம்பரத்திற்கு நிதியுதவி வழங்குதல், அடிப்படை கட்டமைப்பு வசதிகளான புதிய தறிகள் மற்றும் தறி உபகரணங்கள் வழங்குதல் போன்ற



வசதிகள் செய்து தரப்படுவதன் மூலம் இப்பகுதியில் உள்ள நெசவாளர்களின் வாழ்க்கைத்தரம் மேம்படுத்தப்படும். இப்பெருங்குழுமம் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தை முகவராகக் கொண்டு செயல்படும்.

### (ii) கைத்தறி வளர்ச்சிக்கான குழு அணுகுமுறைத் திட்டம் (Group Approach)

கைத்தறி குழும வளர்ச்சி திட்டத்தின் கீழ் வராத கைத்தறி நெசவாளர்கள் பயன் பெற வேண்டும் என்ற நோக்கத்தோடு, ஒருங்கிணைந்த கைத்தறி வளர்ச்சி திட்டத்தின் குழு அணுகுமுறைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒரு குழுவில் 10 முதல் 100 நெசவாளர்கள் வரை சேர்ந்து பயன்பெறலாம். இக்குழு சுய உதவிக்குழுவாகவோ அல்லது பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கமாகவோ அல்லது தனி நெசவாளர்களாகவோ இருக்கலாம்.

ஒருங்கிணைந்த கைத்தறி வளர்ச்சி திட்டத்தின் குழு அணுகுமுறை இனத்தின் கீழ் பல்வேறு இனங்களுக்கு வழங்கப்பட்டு வரும் நிதியுதவியின் விவரம் பின்வருமாறு:-

| வ. எண் | இனங்கள் | நிதியுதவி ரூ. |
|---|---|---|
| 1 | அடிப்படை உள்ளீடுகள் | |
| | அ)விளிம்புத் தொகை | 6000 |
| | ஆ)புதிய தறிகள் கொள்முதல் | 8000 |
| | இ)டாபி கொள்முதல் | 4000 |
| | ஈ)ஜெக்கார்டு கொள்முதல் | 6000 |
| | உ)தறி உபகரணங்கள் கொள்முதல் | 2000 |
| 2 | திறன் மேம்பாட்டு பயிற்சி (20 நபர்களுக்கு) | |
| | அ) நெசவு | 3,00,000 |
| | ஆ)சாயம் தோய்த்தல் | 1,00,000 |
| | இ) வடிவமைப்பு | 50,000 |
| | ஈ)மேலாண்மை பயிற்சி | 25,000 |
| 3 | தறிக்கூடம் அமைத்தல் (20 சதுரமீட்டர் பரப்பளவு) | 25,000 |

இவ்வாறு 119 குழு அணுகுமுறைத் திட்டங்கள் ரூ.11.61 கோடி திட்ட மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. குழு அணுகுமுறைத் திட்டத்தினை 2010-2011 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்த ஏதுவாக, 2010-2011 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.10.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



**(iii) கைத்தறி நிறுவனங்களுக்கு நிதி உதவி**

**(அ) விற்பனை ஊக்குவிப்புத் திட்டம்**

கைத்தறித் துணிகளின் விற்பனையை ஊக்குவிக்க நிதி உதவி வழங்கப்படுகிறது. கடந்த மூன்று ஆண்டுகளின் சராசரி விற்பனையில் 10 விழுக்காடு அளவிற்கு, விற்பனை ஊக்குவிப்புத் தொகை வழங்கப்படுகிறது.

**(ஆ) கைத்தறி நிறுவனங்களை வலுப்படுத்துதல்**

இத்திட்டத்தின்கீழ், தேசீய மற்றும் மாநில அளவிலான கைத்தறி நிறுவனங்கள், கைத்தறி கழகங்கள், தலைமை கூட்டுறவுச் சங்கங்கள் போன்றவற்றின் காசுக்கடன் மற்றும் நடைமுறை மூலதனம் போன்றவற்றிற்கு நிதியுதவி வழங்கப்படுகிறது.

**(iv) புதிய யுத்திகள், விளம்பரம், கண்காணித்தல், மேற்பார்வைப் பயிற்சி மற்றும் திட்டமதிப்பாய்வு**

இத்திட்ட விதிகளின்படி, மொத்த திட்டத் தொகையில் 10 விழுக்காடு அளவுக்கு புதிய யுத்திகளும் (Innovative ideas), விளம்பரம், கண்காணித்தல், பயிற்சி மற்றும் திட்ட மதிப்பாய்வு போன்றவற்றிற்கு 2 விழுக்காடும் பயன்படுத்தப்படலாம்.

## 4.07 கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம்

கைத்தறி நெசவாளர்களிடம் சேமிப்பு பழக்கத்தை ஊக்குவிக்கும் வகையில், கூட்டுறவு கைத்தறி நெசவாளர்களின் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தினை, 1975 ஆம் ஆண்டு முதல் தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. 1985–1986 ஆம் ஆண்டு முதல் 2006–2007 ஆம் ஆண்டு வரை மைய அரசும் இத்திட்டத்தில் தமது பங்கினை வழங்கி வந்தது.

இத்திட்டத்தின் கீழ், நெசவாளர்கள் தாம் ஈட்டும் கூலியில் ரூபாய்க்கு 8 பைசா வீதம் தமது பங்காக செலுத்துவார்கள். நெசவாளர் ஈட்டும் கூலியில் மாநில அரசு தமது பங்காக ரூபாய்க்கு 4 பைசா வழங்குகிறது. இத்தொகைகள் அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டு, மாநில அரசு 9.5 விழுக்காடு வட்டி வழங்குகிறது. இவ்வாறு பெறப்படும் வட்டியில், 6.5 விழுக்காடு நெசவாளர்கள் கணக்கில் வரவு வைக்கப்படுகிறது. எஞ்சிய 3 விழுக்காட்டு வட்டித்தொகை நெசவாளர் முதியோர் ஓய்வூதியத் திட்டம் மற்றும் குடும்ப ஓய்வூதியத் திட்டம் ஆகிய கைத்தறி நெசவாளர்களின் நலத் திட்டங்களை செயல்படுத்த பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தில், 78,937 நெசவாளர்கள் உறுப்பினர்களாக உள்ளனர்.



இத்திட்டத்தின் கீழ் 2009–2010 ஆம் ஆண்டில் மாநில அரசு பங்காக ரூ.488.90 இலட்சம் வழங்கப்பட்டுள்ளதுடன், சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்ட கணக்கில் உள்ள தொகைக்கு 9.5 விழுக்காடு வட்டித் தொகையாக ரூ.1618.99 இலட்சம் அரசால் வழங்கப்பட்டுள்ளது.

## 4.08 தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர்கள் முதியோர் ஓய்வூதியத் திட்டம்

தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர்கள் முதியோர் ஓய்வூதியத் திட்டம், கூட்டுறவு அமைப்பின் கீழ் உள்ள கைத்தறி நெசவாளர்களுக்காக 01.04.1997 முதல் தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தில் தொடர்ந்து நெசவு நெய்யும் உறுப்பினராக இருந்து, 60 வயதை பூர்த்தி செய்யும் கைத்தறி நெசவாளர்கள் முதியோர் ஓய்வூதியம் பெற தகுதி பெறுகின்றனர். 01.06.2007 முதல் முதியோர் ஓய்வூதியத் தொகை மாதம் ஒன்றுக்கு ரூ.200/–லிருந்து ரூ.400/– ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், 31.03.2010 தேதியில் 15,872 கைத்தறி நெசவாளர்கள் முதியோர் ஓய்வூதியம் பெற்று வருகின்றனர்.

முதியோர் ஒய்வூதியத் திட்டத்தினை செயல்படுத்துவதற்கென 2009–2010 ஆம் ஆண்டில் ரூ.804.58 இலட்சம் மாநில அரசால் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 2010-2011 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 4.09 தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டம்

தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டம் 01.01.1992 முதல் தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி, நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராக உள்ள கைத்தறி நெசவாளர், 60 வயதிற்கு முன் இறக்க நேரிட்டால், அவரது வாரிசுக்கு, நெசவாளர் இறந்த தேதியிலிருந்து 10 ஆண்டுகளுக்கு குடும்ப ஓய்வூதியம் வழங்கப்பட்டு வந்தது. இத்திட்டத்தில் மாற்றம் செய்யப்பட்டு 30.03.2010 முதல், நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினர்கள் 60 வயதிற்குள் இறக்க நேரிட்டால், 10 ஆண்டுகள் வரையிலோ அல்லது இறந்தவர் (உயிருடன் இருந்திருந்தால்)



60 வயதை எய்தக் கூடிய காலம் வரையிலோ, இதில் எது இறந்த நெசவாளரின் குடும்பத்திற்கு அதிக பயனளிக்குமோ, அவ்வகையில் குடும்ப ஒய்வூதியம் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. குடும்ப ஓய்வூதியத் தொகை 01.05.2007 முதல் ரூ.350/–லிருந்து ரூ.550/–ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ், 1,244 கைத்தறி நெசவாளர்களின் குடும்பங்களுக்கு குடும்ப ஒய்வூதியம் வழங்கப்படுகிறது. இத்திட்டம் 2010–2011 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 4.10 டாக்டர் எம்.ஜி.ஆர் கைத்தறி நெசவாளர் நலவாழ்வு அறக்கட்டளையின் கீழ் உதவித் தொகை வழங்குதல்

நெசவாளர்களின் குழந்தைகளை மேற்படிப்பு பயில ஊக்குவிப்பதற்காக அவர்களின் மேற்படிப்புக்காக உதவித் தொகை வழங்கும் பொருட்டு, ‘‘டாக்டர் எம்.ஜி.ஆர். கைத்தறி நெசவாளர் நலவாழ்வு அறக்கட்டளை’’ 1986–ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் கீழ்க்கண்டவாறு 32 பிரிவுகளில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் மதிப்பெண் பெறும் ஒரு மாணவன் மற்றும் ஒரு மாணவிக்கு படிப்பு

முடியும் வரை கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது:-

| வ. எண் | பாடத் திட்டம் | உதவித் தொகை (ஆண்டொன்றுக்கு) ரூ. |
|---|---|---|
| 1 | மருத்துவ பட்டப்படிப்பு | 3500 |
| 2 | பல் மருத்துவப் பட்டப்படிப்பு | |
| 3 | பொறியியல் பட்டப்படிப்பு | |
| 4 | தொழில் நுட்பவியல் பட்டப்படிப்பு | |
| 5 | கால்நடை மருத்துவப் பட்டப்படிப்பு | |
| 6 | விவசாயம்/தோட்டக் கலை | 3000 |
| 7 | மருந்தியல் பட்டப்படிப்பு | |
| 8 | செவிலியர் பட்டப்படிப்பு | 2500 |
| 9 | உணவக நிர்வாகம் மற்றும் உணவாக்கத் தொழில் | |
| 10 | முதுகலை பொறியியல் | 3500 |
| 11 | முதுகலை தொழில் நுட்பம் | |
| 12 | முதுகலை மருத்துவம் | |
| 13 | முதுகலை அறுவை சிகிச்சை | |
| 14 | முதுகலை | 3500 |
| 15 | முதுகலை வணிகவியல் | |
| 16 | முதுகலை அறிவியல் | |
| 17 | முதுகலை வணிக நிர்வாகம் | |
| 18 | முதுகலை கணினி பிரயோகம் | |
| 19 | அகவிலை கணக்கியல் (C.A.) | |
| 20 | இளங்கலை | 2500 |
| 21 | இளங்கலை (அறிவியல்) | |
| 22 | இளங்கலை (வணிகவியல்) | |
| 23 | இளங்கலை (வணிக நிர்வாகம்) | |
| 24 | இளங்கலை (வணிக மேலாண்மை) | |
| 25 | இளங்கலை(கணினி பிரயோகம்) | |
| 26 | இளங்கலை (கணினி அறிவியல்) | |
| 27 | பல் தொழில் நுட்ப கல்வி | 2500 |
| 28 | இந்திய ஆட்சிப்பணி / இந்திய காவலர் பணி / வங்கி அலுவலர்கள் தேர்வு | 2500 |
| 29 | +2 வகுப்பில் அதிக மதிப்பெண் | 2500 |
| 30 | பத்தாம் வகுப்பில் அதிக மதிப்பெண் | 2000 |
| 31 | முடநீக்கியல் | 3000 |
| 32 | கைத்தறி தொழில் நுட்பவியல் | |



இத்திட்டம், 2010–2011 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**4.11 இந்திய கைத்தறித் தொழில் நுட்ப பயிலகத்தில் (I.I.H.T) பயிலும் மாணவ மாணவியருக்கு கல்வி உதவித் தொகை**

சேலத்திலுள்ள இந்திய கைத்தறித் தொழில் நுட்ப பயிலகத்தினால் (Indian Institute of Handloom Technology) நடத்தப்படும் 3 ஆண்டு கைத்தறித் தொழில் நுட்ப பட்டயப் படிப்பிற்கு மாணவ, மாணவியரை தேர்வு செய்யும் போது, நெசவாளர்களின் குழந்தைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. இந்த மாணவ, மாணவியர்க்கு தமிழ்நாடு அரசு, கீழ்க்கண்டவாறு கல்வி உதவித் தொகை வழங்கி வருகிறது:-

| | | |
|---|---|---|
| முதலாம் ஆண்டு | ரூ.400/– | மாதமொன்றுக்கு |
| இரண்டாம் ஆண்டு | ரூ.450/– | மாதமொன்றுக்கு |
| மூன்றாம் ஆண்டு | ரூ.500/– | மாதமொன்றுக்கு |

இதே போன்று, கடாக் (கர்நாடகம்) மற்றும் வெங்கடகிரி (ஆந்திரபிரதேசம்) ஆகிய இடங்களிலுள்ள கைத்தறி தொழில்நுட்ப பயிலகங்களில், மூன்று வருட கைத்தறித் தொழில் நுட்ப பட்டய படிப்பு படித்து வரும் தமிழக மாணவ, மாணவியர்க்கும், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் கல்வி நிதியிலிருந்து கல்வி



உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. தற்போது இத்திட்டத்தின் கீழ், 92 மாணவ மாணவியர் உதவித் தொகை பெற்று வருகிறார்கள். 2010–2011ஆம் ஆண்டிலும் இத்திட்டம், தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**4.12 கைத்தறி நெசவாளர்களுக்கான நல்வாழ்வு காப்பீட்டுத் திட்டம்**

கைத்தறி நெசவாளர்களின் உடல்நலத்தை பாதுகாக்கவும், மேம்படுத்தவும் புதிய நல்வாழ்வு காப்பீட்டுத் திட்டத்தினை, 2005–2006 ஆம் ஆண்டு மைய அரசு அறிமுகப்படுத்தியது. ஐசிஐசிஐ லோம்பார்டு (ICICI Lombard) நிறுவனத்தின் மூலம் 2005–2006 ஆம் ஆண்டு முதல் தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள நெசவாளர்களின் விபரம் பின்வருமாறு:-

| வ.எண். | ஆண்டு | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | 2005–2006 | 1,30,000 |
| 2. | 2006–2007 | 2,00,000 |
| 3. | 2007–2008 | 2,84,646 |
| 4. | 2008–2009 | 2,89,023 |
| 5. | 2009–2010 | 3,19,023 |

இத்திட்டத்தின் கீழ், நெசவாளர் பங்காக செலுத்தப்படவேண்டிய காப்பீட்டுக் கட்டணத்தை நெசவாளர் சார்பாக மாநில அரசே செலுத்துகிறது. ஒரு நெசவாளர் குடும்பத்தில் 4 நபர்கள் ஆண்டொன்றுக்கு அதிகபட்சமாக ரூ.15,000/– வரை மருத்துவ உதவி பெற்றுக் கொள்ளலாம். நெசவாளர்கள் நாட்டிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளில் மேற்கொள்ளப்படும் மருத்துவ சிகிச்சைக்கான தொகையினை ஐசிஐசிஐ லோம்பார்டு நிறுவனம் வழங்கும். பிரதம கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள கைத்தறி நெசவாளர்களும், கூட்டுறவு அமைப்பில் இல்லாத நெசவாளர்களும் இத்திட்டத்தின் கீழ் பயன் அடையலாம். கைத்தறித் தொழிலுக்கு தொடர்புடைய, உபதொழில்களான பாவு ஓடுதல், கஞ்சி தோய்த்தல், சாயமிடுதல், அச்சிடுதல் போன்ற பணிகளில் ஈடுபட்டுள்ள கைத்தறி தொழிலாளர்களும் இத்திட்டத்தில் சேர்ந்து பயன்பெறும் வகையில் 2007–2008 ஆம் ஆண்டு முதல் அரசு இத்திட்டத்தினை விரிவுபடுத்தியுள்ளது. இத்திட்டத்தில், 3,19,023 நெசவாளர்கள் உறுப்பினர்களாக உள்ளனர்.

இத்திட்டத்தினை செயல்படுத்த, 2010–2011 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில், மாநில



அரசின் பங்காக ரூ. 417.39 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.13 மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா**

**(அ) கைத்தறி நெசவாளர்களுக்கான காப்பீட்டுத் திட்டம்**

"மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா" என்ற ஆயுள் காப்பீட்டுத் திட்டத்தினை நெசவாளர்களுக்காக மைய அரசு அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தின் கீழ் 18 வயது முதல் 59 வயதுக்குட்பட்ட நெசவாளர்கள் சேர தகுதியுடையவராகிறார்கள். ‘‘மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா’’ திட்டத்தின் கீழ், ஒரு நெசவாளருக்கு, ஓர் ஆண்டிற்கு ஆயுள் காப்பீட்டுக் கழகத்திற்கு செலுத்த வேண்டிய காப்பீட்டுக் கட்டணம் ரூ330/–. அதன் விபரம் பின்வருமாறு:-

| | |
|---|---|
| மைய அரசு பங்கு | ரூ.150/– |
| ஆயுள் காப்பீட்டு கழகத்தின் பங்கு | ரூ.100/– |
| நெசவாளரின் சார்பாக தமிழ் நாடு அரசு செலுத்தும் தொகை | ரூ.80/– |
| **மொத்தம்** | **ரூ.330/–** |

இத்திட்டத்தின் கீழ், பயன்பெறும் கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்படும் காப்பீட்டுத் தொகை பற்றிய

விவரம் பின்வருமாறு:—

| | | |
|---|---|---|
| 1 | இயற்கை மரணம் | ரூ. 60,000/— |
| 2 | விபத்தினால் ஏற்படும் மரணம் | ரூ.1,50,000/— |
| 3 | விபத்தினால் ஏற்படும் நிரந்தர ஊனம் | ரூ.1,50,000/- |
| 4 | விபத்தினால் ஏற்படும் பகுதி ஊனம் | ரூ.75,000/— |

பிரதம கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உள்ள கைத்தறி நெசவாளர்களும், கூட்டுறவு அமைப்பில் இல்லாத கைத்தறி நெசவாளர்களும் இத்திட்டத்தின் கீழ் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். கடந்த 4 ஆண்டுகளில், இறந்த 2082 கைத்தறி நெசவாளர்களின் குடும்பங்களுக்கு ரூ.1126.20 இலட்சம் காப்பீட்டுத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. இது தவிர, கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினராக இருந்து இறந்த கைத்தறி நெசவாளர்களின் குடும்பங்களுக்கு கோ—ஆப்டெக்ஸ் நிறுவனத்தால் தலா ரூ.15,000/— கூடுதலாக வழங்கப்படுகிறது.

நெசவாளர்கள் சார்பாக மாநில அரசால் காப்பீட்டுக் கட்டணம் செலுத்துவதற்காக, 2010—2011 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில், ரூ. 201.78



இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(ஆ) சிக்ஷா சஹாயக் யோஜனா திட்டத்தின்கீழ் கல்வி உதவி தொகை**

“மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா” திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் “சிக்ஷா சஹாயக் யோஜனா” திட்டத்தில், பயனாளிகளாக உள்ள நெசவாளர் குடும்பத்தில் கல்வி பயிலும் மாணவ மாணவியர்க்கு, 9—ஆம் வகுப்பு முதல் 12—ஆம் வகுப்பு வரை (இரண்டு குழந்தைகளுக்கு) அதிகபட்சம் நான்கு ஆண்டுகளுக்கு அல்லது 12—ஆம் வகுப்பு முடிக்கும் வரை ஆண்டொன்றுக்கு ரூ.1200/— வீதம் கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் கடந்த ஆண்டுகளில் கீழ்க்கண்டவாறு கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டது:-

| வருடம் | மாணவ மாணவியர் எண்ணிக்கை | வழங்கப்பட்ட கல்வி உதவித் தொகை (ரூ இலட்சத்தில்) |
|---|---|---|
| 2004—2005 | 9473 | 85.26 |
| 2005—2006 | 14424 | 148.58 |
| 2006—2007 | 23555 | 250.37 |
| 2007-2008 | 25970 | 216.80 |
| 2008—2009 | 29545 | 284.68 |
| 2009—2010 | 34558 | 387.55 |

## 5. துறை மேற்கொண்டுவரும் இதர நடவடிக்கைகள்

### 5.01 கைத்தறி இரக ஒதுக்கீடு சட்டம், 1985

கைத்தறி நெசவாளர்களையும், கைத்தறித் தொழிலையும், விசைத்தறி ஆதிக்கத்திலிருந்து பாதுகாக்க கைத்தறி இரக ஒதுக்கீடு சட்டம் 1985 மத்திய அரசினால் இயற்றப்பட்டு, கைத்தறியில் மட்டுமே உற்பத்தி செய்ய கீழ்கண்ட 11 வகை நெசவு இரகங்களை மத்திய அரசு (சில நிபந்தனைகளுக்குட்பட்டு) ஒதுக்கீடு செய்துள்ளது:-

| | | |
|---|---|---|
| (1) சேலை | (2)வேட்டி | (3) துண்டு, கம்சா மற்றும் அங்கவஸ்திரம் |
| (4) லுங்கி | (5)ஜடார் மேகலா/பாநெக் | (6)ஜமக்காளம், டர்ரி/டர்ரட் |
| (7)டிரஸ் மெட்டீரியல்ஸ் | (8)பேரெக் பிளாங்கெட்ஸ், காம்பால் / கம்பளி | (9)ஷால், லாய், மப்லர், பங்கி முதலியன |
| (10)உல்லன் டுவீடு | (11) கேஸ், பெட்சீட், பெட் கவர், கவுண்டர் பேன், பர்னிசிங் (டேப்பஸ்டிரி மற்றும் அப்ஹோல்ஸ்டிரி உள்பட) | |



கைத்தறி இரக ஒதுக்கீடு சட்டத்தை முனைப்புடன் செயல்படுத்த தமிழ்நாட்டில் பிரத்தியேக அமலாக்கப்பிரிவு ஒன்று சென்னையை தலைமையிடமாகக் கொண்டு ஒரு துணை இயக்குநர் அமலாக்க அலுவலர் அலுவலகமும், சரக அளவில் சேலம், திருச்செங்கோடு, ஈரோடு, திருப்பூர் மற்றும் மதுரை ஆகிய 5 உதவி அமலாக்க அலுவலகங்களும் செயல்பட்டு வருகின்றன.

கைத்தறி இரக ஒதுக்கீடு சட்டத்தை மக்களிடையே பரப்பவும், கைத்தறித் தொழிலை பாதுகாக்கவும் விசைத்தறிகள் மிகுந்துள்ள பகுதிகளில் அவ்வப்போது விழிப்புணர்வு கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. கைத்தறி இரக ஒதுக்கீடு சட்டம் 1985–ஐ தீவிரமாக செயல்படுத்த ஏதுவாக விசைத்தறிகள் அதிகம் உள்ள பகுதிகளில் தொடர்ந்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2009–2010 ஆம் ஆண்டில் 43,702 விசைத்தறிகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. 2010–2011 ஆம் ஆண்டிலும் இந்நடவடிக்கை தொடரும்.

### 5.02 கண்காட்சிகள் நடத்துதல்

கைத்தறி துணிகளின் விற்பனையினை மேம்படுத்தும் பொருட்டு, மைய அரசினால் செயல்படுத்தப்பட்டுவரும்

விற்பனை மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ஒரு மாவட்ட அளவிலான கண்காட்சி நடத்த ரூ.2.00 இலட்சமும், சிறப்பு கண்காட்சிக்கு ரூ.8.00 இலட்சமும் மற்றும் தேசிய அளவிலான கண்காட்சிக்கு ரூ.36.50 இலட்சமும் மானியமாக மைய அரசால் வழங்கப்பட்டு வருகிறது. 2009–2010 ஆம் ஆண்டில் 40 இடங்களில் மாவட்ட அளவிலான கண்காட்சிகளும், 2 சிறப்பு கைத்தறி கண்காட்சிகளும், ஒரு தேசிய அளவிலான கண்காட்சியும் நடத்த மைய அரசு ஒப்புதல் அளித்துள்ளதன் அடிப்படையில், பல்வேறு மாவட்டங்களில் மாவட்ட அளவிலான கண்காட்சிகளும், சிறப்பு கண்காட்சிகளும், கைத்தறித் துறையாலும் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் மூலமும் நடத்தப்பட்டன. மேற்படி கண்காட்சிகள் மூலம் ரூ. 11.03 கோடி மதிப்பிற்கு கைத்தறி துணிகள் விற்பனையாகியுள்ளன. இது தவிர, 2010 ஆம் ஆண்டு தேசிய கைத்தறிக் கண்காட்சி (National Handloom Expo–2010) கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தால் சென்னையில் நடத்தப்பட்டு, இக்கண்காட்சி மூலம் ரூ. 4.11 கோடி விற்பனையாகி உள்ளது.

இதுபோன்ற நடவடிக்கைகள் 2010–2011ஆம் ஆண்டிலும் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.



## 5.03 சில்க் மார்க்

பட்டு ஜவுளிகளின் விற்பனையை உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளில் அதிகப்படுத்தும் நோக்கத்துடன், இந்திய அரசால் “சில்க் மார்க்” அறிமுகப்படுத்தப்பட்டது. சில்க் மார்க் (பட்டு முத்திரை) என்பது மல்பெரி, டசர், எரி அல்லது மூகா பட்டு போன்ற சுத்த மற்றும் இயற்கை பட்டு இரகங்களில் பொருத்தப்பட்டு இவற்றின் தரத்தினை உறுதி செய்ய உதவும் ஒரு அடையாளம் ஆகும். அங்கீகாரம் பெற்ற விற்பனையாளர்கள் மட்டுமே மேற்படி முத்திரைகளை பயன்படுத்த முடியும். கர்நாடகா சங்கங்களின் பதிவுச் சட்டம் 1960–ன்படி பதிவு செய்யப்பட்ட அமைப்பான இந்திய அரசின் ஜவுளித் துறையின் கீழ் உள்ள மத்திய பட்டு வாரியத்தின் ஒரு அங்கமான இந்திய சில்க் மார்க் நிறுவனம் மூலம் “சில்க் மார்க்” திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இந்திய சில்க் மார்க் நிறுவனத்தில் எந்த ஒரு தனி நிறுவனம், மத்திய மாநில அரசு நிறுவனம், தலைமைச் சங்கம், தனியார் மற்றும் கார்ப்பரேட் நிறுவனமும் உறுப்பினராகலாம். இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட உறுப்பினராக சேர்ந்த பின், “சில்க் மார்க்” முத்திரையை

அவர்களது பட்டு ஜவுளிகளில் பயன்படுத்தலாம்.

தமிழ்நாட்டில் காஞ்சிபுரம், சேலம், கும்பகோணம், வேலூர், கடலூர், திருச்செங்கோடு மற்றும் திருவாரூர் ஆகிய பகுதிகளில் உள்ள **88** பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் **32** பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கங்களும், **17** பருத்தி மற்றும் பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கங்களும் மேற்படி நிறுவனத்தில் சில்க் மார்க்கின் அங்கீகரிக்கப்பட்ட உபயோகிப்பாளர்களாக தம்மை பதிவு செய்துள்ளன.

### 5.04 கைத்தறி முத்திரைத் திட்டம்

கைத்தறித் துணி இரகங்களுக்கு தனிப் பெயரை உருவாக்கி, அதன் விற்பனையை அதிகரிக்கும் நோக்கோடு பாரதப் பிரதமர் அவர்களால் **28.06.2006–ல்** “கைத்தறி முத்திரை” திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. மத்திய ஜவுளி அமைச்சகத்தின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் இயங்கும் ஒரு சட்டப்பூர்வ அமைப்பான துணிநூல் குழுமம் (Textile Committee) இதன் செயலாக்க முகமையாகும்.

இதுவரை கோ–ஆப்டெக்சுடன் சேர்ந்து **861** நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும், **3,357** தனியார் / மாஸ்டர் நெசவாளர்கள் / ஏற்றுமதியாளர்களும் கைத்தறி முத்திரை திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.



### 5.05 புவிசார் குறியீடு சட்டத்தின் கீழ் கைத்தறி இரகங்களை பதிவு செய்தல்

ஒரு குறிப்பிட்ட பகுதியில் உற்பத்தி செய்யப்படும் சிறப்பு வாய்ந்த பொருட்களை **1999**-ஆம் ஆண்டு புவிசார் குறியீடு சட்டத்தின் கீழ் பதிவு செய்ய இயலும். இச்சட்டத்தின் மூலம், போலி உற்பத்தியாளர்களை இத்தகைய புவிசார் குறியீட்டுப் பொருட்களை தவறாக பயன்படுத்துவதிலிருந்து உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோர் பாதுகாக்கப்படுகின்றனர். புவிசார் குறியீட்டுப் பதிவு இத்தகைய பொருட்களின் ஏற்றுமதியை மேம்படுத்துவதுடன், உலக வர்த்தக அமைப்பு ஒப்பந்தத்தில் ஒரு அங்கமான அறிவுசார் சொத்துரிமை வர்த்தக ஒப்பந்தத்தின் (TRIPS) கீழ், பிற நாடுகளிலும் பாதுகாப்பை பெற இயலும்.

இந்தியாவின் பாரம்பரியமிக்க கைத்தறி இரகங்களை பாதுகாக்கும் நோக்குடன் கைத்தறி இரகங்களான காஞ்சிபுரம் பட்டு சேலை, பவானி ஜமக்காளம், மதுரை சுங்குடி சேலைகள், சேலம் வெண்பட்டு, ஆரணி பட்டு மற்றும்

கோவை கோரா காட்டன் இரகங்கள் முதலியன பதிவு செய்யப்பட்டுள்ளன. அதன் விவரம் பின்வருமாறு:-

| வ.எண் | பதிவு செய்யப்பட்ட கைத்தறி இரகத்தின் பெயர் | சான்றிதழ் எண் மற்றும் நாள் |
|---|---|---|
| 1. | காஞ்சிபுரம் பட்டு சேலைகள் | சான்றிதழ் எண்.6, நாள் 07.10.2004 |
| 2. | பவானி ஜமக்காளம் | சான்றிதழ் எண்.9, நாள் 25.10.2004 |
| 3. | மதுரை சுங்குடி சேலைகள் | சான்றிதழ் எண்.16, நாள் 24.01.2005 |
| 4. | கோவை கோரா காட்டன் சேலைகள் | சான்றிதழ் எண்.57, நாள் 25.04.2007 |
| 5. | சேலம் வெண் பட்டு | சான்றிதழ் எண்.56, நாள் 16.05.2007 |
| 6. | ஆரணி பட்டு சேலைகள் | சான்றிதழ் எண்.58, நாள் 25.07.2007 |

காஞ்சிபுரம் பட்டு சேலைகளை உற்பத்தி செய்யும் 21 பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் 10 தனியார் பட்டு உற்பத்தியாளர்கள் புவிசார் குறியீடு சட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட உபயோகிப்பாளர்களாக பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

**5.06 ஈரோடு மாவட்டத்தில் கைத்தறி நெசவாளர் பயிற்சி மையம் அமைத்தல்**



உலகமயமாக்கலின் தாக்கத்தினால் விசைத்தறி மற்றும் துணித் தொழிலின் பிற பிரிவுகளின் கடும்போட்டியை கைத்தறித் தொழில் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இப்போட்டியை எதிர்கொள்வதற்கு நெசவாளர்களை தயார் செய்ய கைத்தறி நெசவாளர்களுக்கு மேம்படுத்தப்பட்ட தொழில் நுட்பத்தில் பயிற்சி வழங்க வேண்டியது அவசியமாகிறது. மேற்கண்ட கருத்தின் அடிப்படையில், கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு பயிற்சி அளிக்கும் பொருட்டு ஈரோடு மாவட்டத்தில் ஒரு கைத்தறி நெசவாளர் பயிற்சி மையம் அமைக்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சி மையத்தில் ஒரு குழுவிற்கு 50 நெசவாளர்கள் வீதம் ஒரு மாத அளவிற்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. ஆண்டொன்றுக்கு 600 நெசவாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும்.

**5.07 தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறி பட்டு நெய்யும் தொழிலாளர் நல வாரியம்**

2000–2001 ஆம் ஆண்டில் தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர் நல வாரியம் மற்றும் பல்வேறு

தொழிலில் ஈடுபட்டுள்ள உடல் உழைப்புத் தொழிலாளர்களுக்கென தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறிப் பட்டு நெய்யும் தொழிலாளர் நல வாரியம் உள்ளிட்ட **9** புதிய நல வாரியங்கள் ஏற்படுத்தப்பட்டன. **21.7.2004** முதல் இந்நல வாரியம் உடல் உழைப்புத் தொழிலாளர் நல வாரியத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டது. இதன்பின், **01.09.2006** முதல் இவ்வாரியம் தனியாக செயல்பட ஆணை வெளியிடப்பட்டு, இயங்கி வருகிறது.

இவ்வாரியத்திற்கு மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் தலைவராகவும், அரசு பிரதிநிதிகள் 7 நபர்கள், வேலையளிப்பவர்களின் பிரதிநிதிகள் **6** நபர்கள் மற்றும் தொழிலாளர்களின் பிரதிநிதிகள் 7 நபர்கள் ஆகியோர் உறுப்பினர்களாகவும் உள்ளனர். இவ்வாரியத்தில் **1,62,082** தொழிலாளர்கள் உறுப்பினர்களாக சேர்ந்துள்ளனர். முதியோர் ஒய்வூதியம், மருத்துவ உதவித்தொகை, கல்வி உதவித் தொகை, இயற்கை மரணம், விபத்து மரணம் மற்றும் ஊனம் ஆகியவற்றுக்கு காப்பீட்டுத் தொகை போன்ற நிதி உதவிகள் நெசவாளர்களுக்கு இவ்வாரியத்தின் மூலம் வழங்கப்பட்டு வருகின்றன. இவைப் பற்றிய விவரங்கள் பின்வருமாறு:-



| **வ.எண்** | | **இனம்** | **ஒரு நபருக்கு வழங்கப்படும் நிதி உதவி (ரூபாயில்)** |
|---|---|---|---|
| **1.** | | விபத்து காப்புறுதி | |
| | i | விபத்தால் மரணம் | 1,00,000 |
| | ii | விபத்தால் ஊனம் | ஊனத்தின் தன்மையை பொறுத்தது |
| **2.** | | இயற்கை மரணம் | 15,000 |
| **3.** | | ஈமச்சடங்கு உதவி | 2,000 |
| **4.** | | கல்வி உதவி | |
| | i | பத்தாம் வகுப்பு பயிலும் பெண் குழந்தைக்கு | 1,000 |
| | ii | பத்தாம் வகுப்பு தேர்ச்சி | 1,000 |
| | iii | பதினோராம் வகுப்பு பயிலும் பெண் குழந்தைக்கு | 1,000 |
| | iv | பன்னிரெண்டாம் வகுப்பு பயிலும் பெண்குழந்தைக்கு | 1,500 |
| | v | பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி | 1,500 |
| | vi | சாதாரண பட்ட படிப்பு | 1,500 |
| | vii | சாதாரண பட்ட படிப்பு (விடுதி வசதியுடன்) | 1,750 |
| | viii | சாதாரண பட்ட மேற்படிப்பு | 2,000 |
| | ix | சாதாரண பட்ட மேற்படிப்பு(விடுதி வசதியுடன்) | 3,000 |
| | x | தொழில் நுட்ப படிப்பு ( Professional Degree) | 2,000 |

| | | | |
|---|---|---|---|
| | xi | தொழில் நுட்ப படிப்பு (விடுதி வசதியுடன்) | 4,000 |
| | xii | தொழில் நுட்ப மேற்படிப்பு | 4,000 |
| | xiii | தொழில் நுட்ப மேற்படிப்பு (விடுதி வசதியுடன்) | 6,000 |
| | xiv | ஐ.டி.ஐ/பாலிடெக்னிக் | 1,000 |
| | xv | ஐ.டி.ஐ/பாலிடெக்னிக் (விடுதி வசதியுடன்) | 1,200 |
| **5.** | | திருமண உதவி | 2,000 |
| **6.** | | பிரசவ உதவி | 6,000 |
| **7.** | | மூக்கு கண்ணாடி | **500** வரை |
| **8.** | | ஓய்வூதியம் | **400** (மாதம் ஒன்றுக்கு) |

இந் நலவாரியத்தின் மூலம் **82,360** பயனாளிகளுக்கு ரூ.**17.49** கோடி நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

### 5.08 சிறந்த கைத்தறி ஏற்றுமதியாளர்களுக்கான பரிசு வழங்கும் திட்டம்

கைத்தறித் துணி வகைகளின் ஏற்றுமதியினை ஊக்குவிப்பதற்கும், அயல்நாட்டு சந்தையில் கைத்தறித்துணி விற்பனையினை அதிகரிக்கவும், தமிழ்நாட்டிலுள்ள சிறந்த கைத்தறித்துணி ஏற்றுமதியாளர்களுக்கு பரிசுகள் வழங்கும் திட்டத்தை **1975** ஆம் ஆண்டு முதல் தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ், சிறந்த



ஏற்றுமதியாளர்களுக்கும், ஏற்றுமதி உற்பத்தியில் ஈடுபடும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் வெற்றிச் சின்னங்கள் மற்றும் சான்றிதழ்கள் ஆண்டொன்றுக்கு ரூ.**50,000/–** செலவில் வழங்கப்பட்டு வந்தன. இத்திட்டத்திற்கான செலவினத் தொகை **2009–2010** ஆம் ஆண்டு முதல் ரூ.**50,000/–**லிருந்து ரூ.**1,00,000/–**ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

இத்திட்டம் **2010–2011** ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இதற்கென **2010–2011** ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.**1,00,000/–** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 5.09. புதிய வடிவமைப்பை உருவாக்கும் சிறந்த நெசவாளர்களுக்கு பரிசு வழங்கும் திட்டம்

புதிய வடிவமைப்பினை ஊக்குவிக்கும் வகையில், பருத்தி மற்றும் பட்டு இரக துணியில் புதிய வடிவமைப்பினை உருவாக்கும் சிறந்த நெசவாளர்களுக்கு பரிசு வழங்கும் திட்டம், ஒவ்வொரு ஆண்டும் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் சிறந்த வடிவமைப்புக்குக் கீழ்க்கண்டவாறு பரிசுத்தொகை வழங்கப்படுகிறது:-

| | |
|---|---|
| முதல் பரிசு | ரூ. 5,000/– |
| இரண்டாம் பரிசு | ரூ. 3,000/– |
| மூன்றாம் பரிசு | ரூ. 2,000/– |

இத்திட்டத்திற்கான செலவினம், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின், கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து மேற்கொள்ளப்படுகிறது. இத்திட்டம் 2010–2011 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**5.10 நெசவாளர்களின் "ஹட்கோ" கடன் தள்ளுபடி செய்தல்**

கூட்டுறவு கைத்தறி நெசவாளர்களுக்கான தறிக் கூடத்துடன் கூடிய வீடுகள் அமைக்கும் திட்டத்தின் கீழ், கைத்தறி நெசவாளர்களுக்கு "ஹட்கோ" நிறுவனம் கடன் வழங்கியிருந்தது. நெசவாளர்களின் நிதிநிலை, கடனை திரும்ப செலுத்த இயலாத நிலையில் இருந்ததால், 31.03.2008 அன்று நிலுவையாக இருந்த கைத்தறி நெசவாளர்களின் கடன் தொகையான ரூ.11.70 கோடியை தள்ளுபடி செய்வதெனவும், ஹட்கோ நிறுவனத்திற்கு 2008 முதல் 2015 முடிய உள்ள காலங்களுக்கு செலுத்த வேண்டிய தவணைத் தொகைகளை ஒவ்வொரு காலாண்டிலும் அரசே செலுத்தும்



எனவும் ஆணையிடப்பட்டது. அதன் அடிப்படையில் 2008–2009 ஆம் ஆண்டில் ரூ.3.07 கோடியும், 2009–2010 ஆம் ஆண்டில் ரூ.3.00 கோடியும், நெசவாளர்கள் சார்பாக கடன் தவணைத் தொகையை அரசே செலுத்தியுள்ளது.

2010–2011 ஆம் ஆண்டிற்கு ஹட்கோ நிறுவனத்திற்கு நெசவாளர் சார்பாக கடன் தவணை தொகை செலுத்துவதற்காக 2010–2011ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.3.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**6. விசைத்தறித் தொழில்**

**6.01 தமிழ்நாடு விசைத்தறி நெசவு தொழிலாளர் நல வாரியம்**

விசைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தும் பொருட்டு தமிழக அரசு, தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகள் முறைப்படுத்துதல்) சட்டம் 1982-ன் கீழ் தமிழ்நாடு விசைத்தறி நெசவுத் தொழிலாளர் நல வாரியம் என்ற அமைப்பை ஜூலை 2009–ஆம் ஆண்டில் ஏற்படுத்தியது. இந்த நல வாரியத்தின் மூலம் விசைத்தறி

நெசவுத் தொழிலாளர்களுக்கு விபத்து காப்பீடு, இயற்கை மரண உதவி தொகை, ஈமச்சடங்கு உதவி, கல்வி உதவி, திருமண உதவி, மகப்பேறு உதவி, மூக்கு கண்ணாடி வாங்கிட உதவி மற்றும் ஓய்வூதியம் ஆகிய நலத்திட்ட உதவிகளை நெசவாளர்கள் பெறலாம். **64,837** விசைத்தறி நெசவு தொழிலாளர்கள் இந்த நல வாரியத்தின் கீழ் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர். இந்நல வாரியத்தின் மூலம் **12384** விசைத்தறி தொழிலாளர்கள் பயனடையும் வகையில் பல்வேறு நலத்திட்டங்களுக்காக ரூ.**2.56** கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

**6.02 விசைத்தறிகளை நவீனப்படுத்துதல்**

சாதாரண விசைத்தறிகளை நவீனப்படுத்தி, தரமான துணிகளை உற்பத்தி செய்யவும், உற்பத்தியினை பெருக்கவும், **2009–2010–**ஆம் ஆண்டில் தமிழகத்தின் விசைத்தறி செறிவுப் பகுதிகளான திருச்செங்கோடு, சேலம், கோவை, ஈரோடு மற்றும் மதுரை ஆகிய பகுதிகளை சார்ந்த **1000** விசைத்தறிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் மானியமாக தறி ஒன்றுக்கு ரூ.**5000** வீதம் ரூ.**50.00** இலட்சம் வழங்கப்படுகிறது.

**6.03 விசைத்தறி நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம்**



விசைத்தறி நெசவாளர்களுக்கு இரண்டு மாதங்களுக்கு **500** யூனிட்டுகள் வீதம் இலவச மின்சாரம் வழங்கும் திட்டம் **01.08.2006** முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நெசவுத் தொழில் செய்யும் **1,16,049** விசைத்தறிக் கூடங்கள் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்து வருகின்றன. இதற்கென **2010-2011** ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.**66.84** கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**6.04 ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்காக்கள்**

**(1) ஆயத்த ஆடை ஏற்றுமதி பூங்கா திட்டம் (Apparel Park for Exports Scheme)**

ஆயத்த ஆடை ஏற்றுமதி பூங்கா திட்டம் மத்திய அரசால் **2002**ஆம் ஆண்டு முதல் **2005**ஆம் ஆண்டு வரை செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் சர்வதேச தரம் வாய்ந்த ஆயத்த ஆடை உற்பத்தி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தமிழகத்தில் திருப்பூர் மற்றும் இருங்காட்டுக்கோட்டை ஆகிய இடங்களில் இரண்டு ஆயத்த ஆடை ஏற்றுமதி பூங்காக்கள் நிறுவப்பட்டு இயங்கி வருகின்றன.

## (2) ஜவுளித் தொழில் மைய உட்கட்டமைப்பு வசதி மேம்பாட்டுத் திட்டம் (Textile Centre Infrastructure Development Scheme)

ஜவுளித் தொழில் மைய உட்கட்டமைப்பு வசதி மேம்பாட்டுத் திட்டம் மத்திய அரசால் 2002ஆம் ஆண்டு முதல் 2005ஆம் ஆண்டு வரை செயல்படுத்தப்பட்டு வந்தது. தமிழகத்தில் காஞ்சிபுரம், குமாரபாளையம் மற்றும் திருப்பூர் ஆகிய இடங்களில் இத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. திருப்பூர் பகுதியில், ஏற்றுமதி நிறுவனங்களுக்கு காற்றாலை மூலம் குறைந்த செலவில் தடையில்லா மின்சாரம் வழங்குவதை நோக்கமாக கொண்டு ரூ.25.00 கோடி மதிப்பீட்டிலும், நாமக்கல் மாவட்டம் குமாரபாளையத்தில் ரூ.33.32 கோடி மதிப்பீட்டில் நெசவுப் பூங்காவும், காஞ்சிபுரத்தில் ரூ.21.81 கோடி மதிப்பீட்டில் சாலை, நீர், மின்சாரம் போன்ற உள்கட்டமைப்பு வசதிகள் செய்து தர அனுமதி வழங்கப்பட்டது. காஞ்சிபுரத்தில் பொது சுத்திகரிப்பு நிலையம் ஏற்படுத்தும் பணியைத் தவிர, அனைத்துப் பணிகளும் முடிவடைந்துள்ளன.



## (3) ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்காக்கள் (Scheme for Integrated Texile Parks)

மத்திய அரசு, ஆயத்த ஆடை ஏற்றுமதி பூங்கா திட்டம் மற்றும் ஜவுளித் தொழில் மைய உட்கட்டமைப்பு வசதி மேம்பாட்டுத் திட்டம் ஆகிய இரு திட்டங்களையும் இணைத்து ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா திட்டத்தினை 2005–2006 முதல் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம் ஜவுளி துறைக்குத் தேவையான சர்வதேச தரத்திலான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கி ஏற்றுமதியை அதிகரிக்கவும், வேலை வாய்ப்புகளை உருவாக்கவும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் 7 ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்காக்களை ரூ.591.28 கோடி மதிப்பீட்டில் அமைக்க மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. இப்பூங்காக்கள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு:-

| வ.எண் | ஜவுளி பூங்காவின் பெயர் | திட்டத் தொகை (ரூ.கோடியில்) | திட்டம் ஒப்பளிப்பு ஆண்டு | மத்திய அரசு மானியம் (ரூ.கோடியில்) | மாநில அரசு மானியம் (ரூ.கோடியில்) | ஆண்டு உத்தேச வர்த்தக மதிப்பு (ரூ.கோடியில்) | வேலை வாய்ப்பு பெறும் நபர்கள் | தற்போதைய நிலை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | பல்லடம் உயர் தொழில் நுட்ப நெசவுப் பூங்கா | 55.42 | 2005 | 22.17 | 3.90 | 300 | 6000 | ஏப்ரல் 2008 முதல் உற்பத்தி நடைபெற்று வருகிறது. |
| 2. | குமார பாளையம் உயர் தொழில் நுட்ப நெசவுப் பூங்கா | 34.82 | 2006 | 13.93 | --- | 350 | 3000 | பிப்ரவரி 2009 முதல் உற்பத்தி நடைபெற்று வருகிறது |
| 3. | செங்கப் பள்ளி ஒருங்கி ணைந்த ஜவுளிப் பூங்கா ஈரோடு மாவட்டம் | 149.45 | 2006 | 40.00 | --- | 520 | 12500 | மே 2010ல் உற்பத்தி தொடங்கும் என எதிர் பார்க்கப் படுகிறது |
| 4. | சைமா பதனிடும் பூங்கா, கடலூர் | 112.60 | 2007 | 40.00 | --- | 500 | 15000 | மார்ச் 2011ல் உற்பத்தி தொடங்கும் என எதிர் பார்க்கப் படுகிறது |
| 5. | மதுரை ஒருங்கி ணைந்த ஜவுளிப் பூங்கா | 87.30 | 2007 | 34.92 | --- | 900 | 7000 | அக்டோபர் 2009 முதல் உற்பத்தி நடைபெற்று வருகிறது |
| 6. | கரூர் ஒருங்கி ணைந்த ஜவுளிப் பூங்கா | 90.68 | 2007 | 36.27 | -- | 623 | 7000 | மே 2010ல் உற்பத்தி தொடங்கும் என எதிர் பார்க்கப் படுகிறது |
| 7. | வைகை உயர் தொழில் நுட்ப நெசவுப் பூங்கா, ஆண்டிப் பட்டி | 61.01 | 2009 | 24.40 | 4.37 | 360 | 6000 | செப்டம்பர் 2011ல் உற்பத்தி தொடங்கும் என எதிர் பார்க்கப் படுகிறது |



**“காஞ்சிபுரம் அறிஞர் அண்ணா நூற்றாண்டு நிறைவு கைத்தறி பட்டுப் பூங்கா”** ரூ.40.00 கோடி செலவில் அமைக்கப்படும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது. இப்பூங்காவின் மூலம் சுமார் 10000 நெசவாளர்களுக்கு தொடர்ந்து வேலைவாய்ப்பு வழங்குவதுமட்டுமல்லாமல், இப்பகுதியில் உள்ள பட்டு தொழிலும் மேம்படுத்தப்படும். இப்பூங்காவில் கைத்தறி நெசவு பிரிவு, சாயப்பிரிவு, பொது சுத்திகரிப்பு நிலையம், வடிவமைப்பு மற்றும் பயிற்சி மையம், கண்காட்சி அறை போன்றவை ஏற்படுத்தப்படும். இப்பூங்காவினை

காஞ்சிபுரத்தின் அருகே உள்ள கீழ்கதிர்பூரில் அமைப்பதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**6.05 திருப்பூர் பின்னலாடை தொழிற்சாலைகளுக்கு மான்ய நிதி உதவி**

திருப்பூரில் பல ஆண்டு காலமாக சிறப்பாக செயல்பட்டு வந்துள்ள பின்னலாடைத் தொழிலானது இலட்சக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கியதோடு நாட்டிலேயே பின்னலாடை ஏற்றுமதியில் முதன்மை நிலை பெற்று விளங்குகிறது. இத்தொழிற்சாலைகளிலிருந்து வெளியாகும் கழிவு நீர், சுற்றுச்சூழல் விதிகளுக்கிணங்க கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்ற நீதிமன்ற ஆணைக்கிணங்க திருப்பூரில் 20 பொது சுத்திகரிப்பு நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. திருப்பூரில் உள்ள பின்னலாடைத் தொழிலை ஊக்குவிக்கவும், உலக அளவில் அத்தொழிலின் வர்த்தக முக்கியத்துவத்தை தொடர்ந்து நிலைநாட்டவும், சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கு இந்த அரசு வழங்கும் முக்கியத்துவத்தின் அடிப்படையிலும் இந்நிதியாண்டின் வரவு செலவுத் திட்ட அறிக்கையில் பொது சுத்திகரிப்பு நிலையங்களை



ஏற்படுத்தியதற்கான முதலீட்டிற்கு மான்ய உதவியாக ரூ.320.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் ரூ.200.00 கோடி மத்திய அரசின் பங்காகவும் ரூ.120.00 கோடி மாநில அரசின் பங்காகவும் அமையும்.

**7. 2010-2011 ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டங்கள்**

**7.01 ஒரு புதிய ஈப்பு ஊர்தி நாகர்கோவில் சரகத்திற்காக வாங்குதல்**

நாகர்கோவில் சரக கைத்தறி மற்றும் துணிநூல் உதவி இயக்குநர் அலுவலகத்திற்கென ரூ.5.00 இலட்சம் செலவில் ஒரு புதிய ஈப்பு ஊர்தி 2010-2011 ஆம் ஆண்டில் வழங்கப்படும்.

**7.02 சரக அலுவலகங்களுக்கு 10 ஒளி நகலிகள் வழங்குதல்**

நெசவாளர்களின் பல்வேறு வளர்ச்சி மற்றும் நலத்திட்டங்களை துரிதமாக செயல்படுத்தும் வகையில் அறிவுரைகள் மற்றும் வழிகாட்டுதல்களை சரக அலுவலகங்கள் வேகமாக செயல்படுத்த ரூ.55,000/- வீதம் ரூ.5.50 இலட்சம் மதிப்பிற்கு 10 ஒளி நகலிகள் 2010-2011 ஆம் ஆண்டில் பத்து சரக அலுவலகங்களில் நிறுவப்படும்.

### 7.03 புதிய வடிவமைப்புகளை உருவாக்க நிதி உதவி

வேகமாக மாறிவரும் நாகரீக வாழ்க்கைக்கு ஏற்ப, உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி இரகங்களின் விற்பனையை ஊக்குவிக்க **500** புதிய வடிவமைப்புகள் ரூ.**15.00** இலட்சம் செலவில் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் மூலம் உருவாக்கப்படும்.

### 8. கூட்டுறவு நூற்பாலைகள்

தமிழ்நாட்டில் பின் தங்கிய கிராம மக்களுக்கு வேலை வாய்ப்பு வழங்குதல் மற்றும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேவைப்படும் தரமான சிட்டா மற்றும் கோன் வகை நூல் வழங்குதல் ஆகிய நோக்கங்களுடன் 1958 முதல் 1985 வரையிலான பல்வேறு கால கட்டங்களில் 18 கூட்டுறவு நூற்பாலைகள் மொத்தம் 4.70 இலட்சம் கதிர்கள் திறனுடன் நிறுவப்பட்டன.

பல்வேறு காரணங்களினால் இந்நூற்பாலைகள் நலிவடைந்து அவற்றில் **1998**, **1999** ஆம் ஆண்டுகளில் நான்கு கூட்டுறவு நூற்பாலைகளும், **2003–**ல் ஏழு கூட்டுறவு நூற்பாலைகளும், **2004**ஆம் ஆண்டில் மேலும் இரு கூட்டுறவு நூற்பாலைகளும் முற்றிலுமாக செயலிழந்தன. **2004–**



**2005**ஆம் ஆண்டிலிருந்து பின்வரும் ஐந்து கூட்டுறவு நூற்பாலைகள் மட்டுமே **94,640** கதிர்களுடன் இயங்கி வருகின்றன:-

1. பாரதி கூட்டுறவு நூற்பாலை, எட்டையபுரம், தூத்துக்குடி மாவட்டம்
2. அண்ணா கூட்டுறவு நூற்பாலை, ஆண்டிப்பட்டி, தேனி மாவட்டம்
3. கிருஷ்ணகிரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, ஊத்தங்கரை, கிருஷ்ணகிரி மாவட்டம்
4. புதுக்கோட்டை மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, அறந்தாங்கி, புதுக்கோட்டை மாவட்டம்
5. கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, ஆரல்வாய்மொழி, கன்னியாகுமரி மாவட்டம்.

இந்நூற்பாலைகள் மாநில அரசின் இலவச வேட்டி சேலை திட்டம், பள்ளிக் குழந்தைகளுக்கான சீருடை திட்டம், பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் பொது சந்தைத் துணி வகைகள் உற்பத்தி ஆகியவற்றிற்கு தேவைப்படும் பல்வேறு நூல் இரகங்களை உற்பத்தி செய்து வழங்கி வருகின்றன.

இயங்கும் கூட்டுறவு நூற்பாலைகளின் கடந்த ஆறு ஆண்டு கால நிதி நிலை செயல்பாட்டினை ஒப்புநோக்குகையில், 2009–2010–ஆம் ஆண்டின் செயல்பாடு சிறப்பாக அமைந்துள்ளது.

**9. தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் லிமிடெட் (கோ–ஆப்டெக்ஸ்)**

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், "கோ–ஆப்டெக்ஸ்" என்ற வணிகப் பெயருடன் 1935 ஆம் ஆண்டு மாநில அளவிலான சங்கமாக தொடங்கப்பட்டது. இந்நிறுவனம் தமிழ்நாட்டிலுள்ள பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உற்பத்தி செய்யும் கைத்தறித் துணி இரகங்களை சந்தைபடுத்தும் முகவர் நிறுவனமாக செயல்படுவதுடன் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அனைத்து விற்பனை மேம்பாட்டு உதவிகளையும் செய்து வருகின்றது. கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நூல் விநியோகம் செய்து, சங்கங்கள் உற்பத்தி செய்யும் தரமான இரகங்களை கொள்முதல் செய்து, தமிழகத்திலுள்ள 140 விற்பனை நிலையங்கள் மற்றும் இதர மாநிலங்களில் உள்ள 71 விற்பனை நிலையங்கள் ஆக மொத்தம் 211 விற்பனை நிலையங்கள் மூலமாக விற்பனை செய்து வருகிறது. **இந்நிறுவனம் 75 ஆண்டுகள் சிறப்பாக**



**செயல்பட்டு மக்களிடையே நற்பெயரையும் நல்அடையாளத்தையும் பெற்று, இந்தியாவிலேயே பவள விழா கொண்டாடும் முதல் தலைமை கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கமாகும்.**

மேலும், கீழ்க்காணும் அரசு நலத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் ஒருங்கிணைப்பு முகமை நிறுவனமாகவும் கோ–ஆப்டெக்ஸ் விளங்கி வருகிறது:-

i) இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டம் மற்றும் முதியோர் ஓய்வூதியம் பெறும் வயது முதிர்ந்தோர்க்கு இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டம்

ii) பள்ளி மாணவ மாணவியருக்கான இலவச சீருடைத் திட்டம்

**2009–2010 ஆம் ஆண்டின் செயல்பாடுகள்**

கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் தனது விற்பனை நிலையங்கள் மூலம் சில்லறை விற்பனையையும், ஒப்பந்த விற்பனை நிலையங்கள் மூலம் அரசின் பல்வேறு திட்டங்களுக்கான துணிகளையும் விற்பனை செய்து வருகிறது.

2008–2009ஆம் ஆண்டில் சில்லறை விற்பனை ரூ.150.29 கோடியாக இருந்தது. இஃது 2009–2010ஆம் ஆண்டில் ரூ.180.67 கோடியாக உயர்ந்துள்ளது. இது கடந்த ஆண்டு நிகழ்த்தப்பட்ட மொத்த சில்லறை விற்பனையைவிட ரூ.30.38 கோடி அதிகம் ஆகும். அதேபோல் 2009–2010ஆம் ஆண்டில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் கொள்முதல் செய்துள்ள துணிகளின் அளவு சென்ற ஆண்டைக் காட்டிலும் ரூ.12.95 கோடி உயர்ந்து ரூ.108.38 கோடி அளவினை எட்டியுள்ளது.

ஏற்றுமதி பிரிவிலும் 2008–2009ஆம் ஆண்டில் நிகழ்த்தப்பட்ட மொத்த விற்பனையான ரூ.3.49 கோடியைவிட 2009–2010ஆம் ஆண்டில் ரூ.4.12 கோடி அளவிற்கு துணிகள் ஏற்றுமதி செய்யப்பட்டன.

ஆகவே, 2009–2010ஆம் ஆண்டில் மொத்த விற்பனை உயர்ந்து ரூ.520.93 கோடி அளவை எட்டியது. இஃது 2008–2009ஆம் ஆண்டில் நிகழ்த்தப்பட்ட மொத்த விற்பனையைக் காட்டிலும் ரூ.59.47 கோடி அதிகமாகும்.



கோ–ஆப்டெக்ஸ், 2008–2009ஆம் ஆண்டில் ரூ.16.52 கோடி நிகர இலாபம் ஈட்டியது. 2009–2010ஆம் ஆண்டில் விற்பனையில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு வியாபார யுத்திகளின் காரணமாக நிகர இலாபம் மேலும் உயர்ந்து ரூ.20.00 கோடி அளவை எட்டும் என கணக்கிடப்பட்டுள்ளது.

**வடிவமைப்பு மேம்பாடு**

விற்பனைச் சந்தையில் ஏற்பட்டுள்ள போட்டிகளை ஈடுகொடுக்கும் வகையிலும், விற்பனையைப் பெருக்கும் நோக்கத்துடனும், கோ–ஆப்டெக்ஸ், கண்கவர் வண்ணங்களை உள்ளடக்கிய புதிய வடிவமைப்புகளை தனது இரகங்களில் அறிமுகப்படுத்தி வருகிறது.

**வடிவமைப்புத் துறையில், குறிப்பிடத்தக்க வகையில் கோ–ஆப்டெக்ஸ் நிகழ்த்தியுள்ள சாதனைகள் கீழ்வருமாறு:-**

i. பாரம்பரியமிக்க காஞ்சிபுரம் பட்டு, ஜக்கார்டு நெசவில் பழமையும், புதுமையும் ஒரே சேலையில் சங்கமிக்கும் வகையில் “ சங்கமம் பட்டு சேலை” வடிவமைக்கப்பட்டுள்ளது.

ii. கலாஷேத்திரா நிறுவனத்தின் வடிவமைப்புகளை ஆதாரமாகக்கொண்டு கோ–ஆப்டெக்ஸ் வடிவமைப்பாளர்கள் உருவாக்கிய பாரம்பரிய வடிவமைப்பு சின்னங்களான ருத்ராட்சம், மயில்கண், குயில்கண், அன்னம், மயில் ஆகியவற்றை தொகுத்து குறைந்த அளவில் ஜரிகையை உபயோகப்படுத்தி "ருத்ரா பட்டுச் சேலைகளின் தொகுப்பு" உருவாக்கப்பட்டுள்ளது.

iii. மொகலாய மன்னர்களின் ஓவியக் கலைகளை பிரதிபலிக்கும் வகையில், பாரம்பரியமிக்க பல வண்ண வடிவமைப்புகளை உள்ளடக்கி "மின்னும் பூக்கள்" பட்டு சேலை வடிவமைக்கப்பட்டுள்ளது.

iv. பல்லவர் கால கலைச் சிற்பத்திலுள்ள 108 பழங்கால புராதன வடிவமைப்புகளைக் கொண்டு "சர்வமங்களா பட்டு சேலை" வடிவமைக்கப்பட்டுள்ளது.

v. சேலையின் முந்தியில், சிறப்பு வலை நெசவு முறையில் முத்துக்கள் பதிக்கப்பட்டு "தங்க கோபுரம் பட்டு சேலை" வடிவமைக்கப்பட்டுள்ளது.



vi. பட்டு மற்றும் பருத்தி சேலைகளின் பாரம்பரிய மதிப்பினை வெளிக்கொணரும் வகையில், தமிழ்நாட்டின் பாரம்பரியமிக்க பட்டு மற்றும் கைத்தறி மையங்களில் உற்பத்தி செய்யப்பட்ட, முத்தாறு பட்டு சேலைகள், பவானி கோரா பட்டு சேலைகள், திருமணி பருத்தி சேலைகள், திருச்சி பருத்தி சேலைகள், வைகை பருத்தி சேலைகள், அர்ச்சனா பருத்தி சேலைகள், பொன்னை டை அண்டு டை பருத்தி சேலைகள் ஆகிய சேலைகள் வாடிக்கையாளர்களைக் கவரும் வண்ணம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

vii. சேலைகள் மட்டுமல்லாமல் வீட்டு உபயோக இரகங்களான போர்வைகள், படுக்கை உறைகள், படுக்கை விரிப்புகள், மேஜை மற்றும் சமயலறை அலங்காரத் துணிகள், பர்னிஷிங், தரைவிரிப்புகள் ஆகிய இரகங்களிலும் வடிவமைப்பு மேம்பாடு செய்யப்பட்டுள்ளது.

viii. கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் 2009–2010 ஆம் ஆண்டில் சுமார் 1200 புதிய வடிவமைப்புகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

## வடிவமைப்பில் நெசவாளர்களுக்கான பயிற்சி

நெசவாளர் மற்றும் வடிவமைப்பாளர் திட்டத்தின் கீழ், 11 தன்னார்வ வடிவமைப்பாளர்கள், பாரம்பரியமிக்க கைத்தறி மையங்களான காஞ்சிபுரம், ஆரணி, கோயம்புத்தூர், சென்னிமலை, பவானி, கும்பகோணம், பரமக்குடி, மதுரை, திண்டுக்கல், அருப்புக்கோட்டை மற்றும் ஜெயங்கொண்டம் ஆகிய இடங்களில் நெசவாளர்களுக்கு வடிவமைப்பில் பயிற்சி அளிக்க அமர்த்தப்பட்டுள்ளனர். இந்த வடிவமைப்பாளர்கள் நெசவாளர்களுக்கு வடிவமைப்பு குறித்த தேவையான வழிகாட்டுதல்களை மேற்கொள்வதோடு, தாங்களே புதிய வடிவமைப்புகளையும் உருவாக்குகின்ற பணியிலும் ஈடுபட்டுள்ளனர். நெசவாளர்கள் நெசவின் நவீன யுத்திகளை தெரிந்துகொள்வதோடு, வாடிக்கையாளர்களின் இரசனைக்கேற்ப உற்பத்தியினை மேற்கொள்ளவும் இந்த பயிற்சியானது உதவுகிறது. இத்திட்டம் 2009–2010 ஆம் ஆண்டில் ரூ.15.00 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டது. இந்நிதி ஆண்டிலும் ரூ.15.00 இலட்சம் செலவில் இப்பயிற்சி தொடர்ந்து அளிக்கப்படும்.



## விற்பனை அபிவிருத்தி

i. சில்லறை விற்பனையை அதிகரிக்க காலத்திற்கேற்ற வகையிலான இரகங்களை மாதந்தோறும், கோ–ஆப்டெக்ஸ் பிரதான விற்பனை நிலையங்களில் புதிய வாடிக்கையாளர்களைக் கவரும் வகையில் கண்காட்சிகள் நடத்தப்பட்டு விற்பனை நடைபெற்று வருகிறது.

ii. 2009–2010 ஆம் ஆண்டில் 206 கண்காட்சிகள் நடத்தப்பட்டு, அதன்மூலமாக, ரூ.12.02 கோடி அளவிற்கு விற்பனை நடைபெற்றுள்ளது.

iii. சரக்கு இருப்பு, விற்பனை போன்ற விவரங்களை உடனுக்குடன் தெரிந்துகொள்ளும் வகையில் 125 விற்பனை நிலையங்கள் கணினிமயமாக்கப்பட்டுள்ளன.

iv. 50 கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்கள் குளிர்சாதன வசதியுடன் நவீன–மயமாக்கப்பட்டுள்ளன.

v. 2010 ஆம் ஆண்டில் தேசிய கைத்தறி கண்காட்சி சென்னையில் நடத்தப்பட்டு, இக்கண்காட்சி மூலம் ரூ.4.11 கோடி அளவிற்கு விற்பனை நிகழ்த்தப்பட்டுள்ளது.

**2010–2011 ஆம் ஆண்டிற்கான செயல்முறைத் திட்டம்**

2010–2011 ஆம் ஆண்டில் ரூ.200.00 கோடி அளவிற்கு சில்லறை விற்பனை செய்ய திட்டமிடப்பட்டு அதனை அடைய கீழ்காணும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன:-

அ) ஒவ்வொரு விழாக் காலத்திற்கும் தேவையான சரக்குகள் கண்டறியப்பட்டு அதனை உரிய நேரத்தில் கொள்முதல் செய்யும்பொருட்டு உற்பத்தித் திட்டம் உருவாக்கப்படும். இந்த உற்பத்தித் திட்டம், சங்கங்களுக்கு ஆண்டு தொடக்கத்திலேயே வழங்கப்பட்டு, தேவையான சரக்குகள் உற்பத்தி செய்யப்பட்டு உரிய நேரத்தில் கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களுக்கு சில்லறை விற்பனைக்காக வழங்கப்படும்.



ஆ) கோ–ஆப்டெக்ஸின் சில்லறை விற்பனையைப் பெருக்கும் பொருட்டு சேலைகள், வீட்டு உபயோக இரகங்கள், ஆயத்த ஆடை சட்டைகள், குர்த்தா துணிவகைகள், சுடிதார் போன்ற இரகங்கள் புதிய வடிவமைப்புகளுடன் உருவாக்கப்படவுள்ளன.

இ) தகவல் தொழில் நுட்ப தொடர்பை மேம்படுத்த கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்கள், மண்டல சேமிப்பு கிடங்குகள் முதலியவற்றிற்கும் மண்டல அலுவலகங்கள் மற்றும் தலைமை அலுவலகத்திற்கும், புதிய கணினிகள் வழங்கப்பட்டு, இவை அனைத்தும் ஒருமுகப்படுத்தப்பட்டு, ஒரு மேலாண்மைத் தகவல் முறை (MIS) ஏற்படுத்தப்படும்.

**10. தமிழ்நாடு சரிகை ஆலை, காஞ்சிபுரம்**

தமிழ்நாடு சரிகை ஆலை, 1974 ஆம் ஆண்டு காஞ்சிபுரத்தில் தொடங்கப்பட்டு நன்முறையில் செயல்பட்டு வரும் மாநில அரசின் பொதுத்துறை நிறுவனமாகும். இந்நிறுவனத்தில் பங்கு மூலதனமாக ரூ.34.40 இலட்சம் அரசு முதலீடு செய்துள்ளது. தரமான சரிகையினை உற்பத்தி செய்து நியாயமான விலையில் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்குதல் இந்நிறுவனத்தின் முதன்மை

நோக்கமாகும். இந்நிறுவனம் ஆண்டிற்கு 81,000 சரிகை மார்க்குகளை உற்பத்தி செய்யும் திறனுடையது. பட்டு நெசவுத் தொழில் சிறந்து விளங்கும் கும்பகோணம் பகுதியின் சரிகை தேவைக்கென 1999 ஆம் ஆண்டு முதல் கும்பகோணத்தில் இந்நிறுவனத்தின் கிளை ஒன்று செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனத்தில் சரிகை உற்பத்தி, விற்பனை மற்றும் சரிகை தர பரிசோதனை முதலிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பட்டு துணிகளில் பயன்படுத்தப்பட்டுள்ள சரிகையின் தரம் அறிய "எக்ஸ்ரே ஊடுகதிர் பகுப்பாய்வு" முறையைப் பயன்படுத்தி தரம் கண்டறியப்படுகிறது. "எக்ஸ்ரே ஊடுகதிர் பகுப்பாய்வு இயந்திரம்" காஞ்சிபுரம் மற்றும் சேலத்தில் செயல்பட்டு வருகின்றன.

**2009–2010 ஆம் ஆண்டில் செயல்பாடுகள்**

I. ஹிந்நிறவனம் 2009–2010ஆம் ஆண்டில் 42,884 சரிகை மார்க்குகளை உற்பத்தி செய்து ரூ.29.89 கோடி மதிப்புள்ள 41,773 சரிகை மார்க்குகளை விற்பனை செய்து ரூ.22.82 இலட்சம் நிகர இலாபம் (உத்தேசமாக) அடைந்துள்ளது.

ii பட்டு புடவைகள், பாவாடைகள் மற்றும் வேட்டிகளில் உள்ள சரிகையினை, "எக்ஸ்ரே ஊடுகதிர் பகுப்பாய்வு இயந்திரம்" மூலம் தர பரிசோதனை செய்து பரிசோதனை கட்டணமாக ரூ.2,14,935/– வசூலித்துள்ளது.

iii இந்நிறுவனம் வெள்ளிபட்டிழை உற்பத்தி செய்முறையினை மேம்படுத்துவதற்கு தேவையான தொழில் நுட்ப ஆலோசனையை குமரகுரு தொழில் நுட்ப கல்லூரியிடமிருந்து பெற்று செயல்படுத்தி வருகிறது. மேலும், வெள்ளியிழை உற்பத்தி செய்முறையினை மேம்படுத்துவதற்கு ஹைதராபாத்தில் உள்ள உலோக தொழில்நுட்ப மேம்பாட்டு மையத்திடம் (Non-ferrous Material Technology Development Centre) ஆலோசனை பெற்றுள்ளது.

**2010–2011 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டம்**

(i) இந்நிறுவனம் 2010–2011 ஆம் ஆண்டில், 60,000 மார்க் சரிகையினை உற்பத்தி செய்து விற்பனை செய்ய திட்டமிட்டுள்ளது.

(ii) இந்நிறுவனம் 2010–2011 ஆம் ஆண்டில் சரிகை உற்பத்தியில் தன்னிறைவு அடையும் நோக்குடன் ஹைதராபாத்திலுள்ள உலோக தொழில்நுட்ப

மேம்பாட்டு மையத்துடன் (Non- ferrous Material Technology Development Centre) இணைந்து "End to End Technology" என்ற புதிய தொழில்நுட்பத்தினை செயல்படுத்த திட்டமிட்டுள்ளது.

**11. தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம்**

கூட்டுறவு அமைப்பின் கீழ் இல்லாத நெசவாளர்களுக்கு அவர்கள் உற்பத்தி செய்யும், கைத்தறி, விசைத்தறி மற்றும் பின்னலாடைத் துணிகளின் உற்பத்தி மற்றும் விற்பனைக்காகக் கடனுதவி வழங்கும் நோக்குடன் தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் 1964 ஆம் ஆண்டு சென்னையில் தொடங்கப்பட்டது. இக்கழகத்தில் தற்போது 11841 உறுப்பினர்கள் உள்ளனர். இக்கழகத்தின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனமான ரூ.429.23 இலட்சத்தில் தமிழக அரசின் பங்கு ரூ.267.00 இலட்சமாகும்.

இந்நிறுவனம் அனைத்து லூம்வேர்ல்டு விற்பனை வளாகங்களுக்கும் விற்பனை ஒருங்கிணைப்பாளராக செயல்படுவதுடன் 9 கைத்தறி குழுமங்களின் குழும வளர்ச்சி திட்டத்தை செயல்படுத்தும் முகமையாகவும் செயல்பட்டு வருகின்றது.



**2009–2010 ஆம் ஆண்டில் செயலாக்கம்**

(i) இந்நிறுவனம் நடப்பு ஆண்டில் 224 உறுப்பினர்களுக்கு ரூ.83.25 இலட்சம் கடன் வழங்கி உள்ளது.

(ii) இந்நிறுவனம் ரூ.113.20 இலட்சம் கடன் தவணைக்காகவும், ரூ.33.59 இலட்சம் வட்டி தவணைக்காகவும் திரும்ப பெற்றுள்ளது.

**2010–2011 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டம்**

(i) இந்நிறுவனம் 2010–2011 ஆம் ஆண்டில் 250 உறுப்பினர்களுக்கு ரூ.180.00 இலட்சம் கடன் அளிக்கவும், ரூ.200.00 இலட்சம் கடன் திரும்ப பெறவும் திட்டமிட்டுள்ளது.

(ii) இந்நிறுவனம் ஆலை வாயில் விலையில் நூல் வழங்கும் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் 2010–2011 ஆம் ஆண்டில் நூல் விற்பனை ரூ.110.00 இலட்சம் அளவுக்கு மேற்கொள்ள திட்டமிட்டுள்ளது.

**12. தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம்**

மூடப்பட்ட துணிநூல் ஆலைகளால் ஏற்பட்ட வேலைவாய்ப்பின்மைக்கு வேலை வாய்ப்பு வழங்கும் வகையிலும், துணிநூல் தொழிலை மறுசீரமைக்கும்

வகையிலும் தமிழ் நாடு பஞ்சாலைக் கழகம், 1969–ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இக்கழகத்தின் கீழ், ஒவ்வொன்றும் 96 தறிகளைக் கொண்ட 2 விசைத்தறிக் கூடங்கள், அருப்புக்கோட்டையிலும், சிவகிரியிலும் உள்ளன. மேலும் கோவை, குறிச்சி பகுதியில் 12 தானியங்கி தறிகளையும், 24 சாதா தறிகளையும் கொண்ட தறிக்கூடம் ஒன்றும் உள்ளது. தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம், சூட் மற்றும் சட்டைக்குத் தேவையான பாலியஸ்டர் துணி வகைகளை குறிச்சி தானியங்கி கூடம், சிவகிரி மற்றும் அருப்புக்கோட்டை விசைத்தறிக் கூடங்களில் உற்பத்தி செய்து வருகிறது.

இலவச சீருடைத்துணி வழங்கும் திட்டத்திற்கான வெள்ளை நிற சட்டைத்துணி, நீல நிற தாவணி மற்றும் பாவாடைக்கான துணி போன்றவைகளையும் இக்கழகம் உற்பத்தி செய்து வருகிறது. மேலும் இக்கழகம் மாநில போக்குவரத்துக் கழகம், தமிழ்நாடு மின்வாரியம், கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் , தமிழ்நாடு சிமெண்ட்ஸ், காவல்துறை மற்றும் பிற பொது நிறுவனங்களிடமிருந்து பாலியஸ்டர் சீருடைத் துணி வழங்குவதற்கான ஆணைகளைப் பெற்று அவற்றை நிறைவேற்றி வருகிறது.



**2009–2010 ஆம் ஆண்டில் செயலாக்கம்**

இலாபத்தில் இயங்கிவரும் இந்நிறுவனம் 2009–2010 ஆம் நிதியாண்டில் ரூ.21.00 கோடி மதிப்புள்ள 76.50 இலட்சம் மீட்டர் துணிகளை விற்பனை செய்துள்ளது.

**2010–2011 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டம்**

இந்நிறுவனம் 2010–2011 ஆம் ஆண்டில் ரூ.23.13 கோடி மதிப்புள்ள 79.23 இலட்சம் மீட்டர் துணிகளை விற்பனை செய்து ரூ.18.65 இலட்சம் நிகர இலாபம் ஈட்டுமென கணக்கிடப்பட்டுள்ளது.

## 13. தமிழ்நாடு கூட்டுறவுத் துணிநூல் பதனிடும் ஆலை

தமிழ்நாடு கூட்டுறவுத் துணிநூல் பதனிடும் ஆலை 1973 ஆம் ஆண்டு ஈரோட்டில் தொடங்கப்பட்டது. இதன் மொத்த பங்கு மூலதனமான ரூ. 106.57 இலட்சத்தில் தமிழ் நாடு அரசின் பங்கு ரூ.77.79 இலட்சம் ஆகும். இந்நிறுவனம் வெளுத்தல், சாயமிடல், மெருகேற்றல், அச்சிடல் போன்ற பல்வேறு பதனிடும் பணிகளையும் பருத்தி மற்றும் செயற்கை இழை நூலினை பதனிடும் பணிகளையும் மேற்கொண்டு

வருகிறது. இந்நிறுவனம் மாதமொன்றுக்கு சுமார் 18 இலட்சம் மீட்டர் துணிகளை, பதனிடும் திறன் பெற்றுள்ளது. அரசின் சீருடை திட்டத்திற்கு தேவைப்படும் துணிகளை பதனிட்டு வழங்கும் பணியினை மேற்கொள்வதோடு, தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம், விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், சர்வோதயாச் சங்கம், மத்திய சிறைச்சாலை, கேரளா மற்றும் கர்நாடகா கைத்தறி வளர்ச்சிக் கழகங்களிடமிருந்தும் துணிகளைப் பெற்று பதனிட்டு வழங்கி வருகிறது.

**2009–2010 ஆம் ஆண்டில் செயலாக்கம்**

(i) தமிழ்நாடு கூட்டுறவு பதனிடும் ஆலை ரூ.10.98 கோடி மதிப்பிற்கு வணிகம் செய்து, ரூ.11.75 இலட்சம் (உத்தேசமாக) நிகர இலாபம் ஈட்டியுள்ளது.

(ii) இந்நிறுவனம் உற்பத்தியினைப் பெருக்க ஏதுவாக ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின்கீழ் நிதியுதவி பெற்று ரூ.50.00 இலட்சம் செலவில் புதிய இயந்திரங்களை நிறுவியுள்ளது.



(iii) இந்நிறுவனம் சாயக்கழிவு நீரினை சுத்திகரிக்க ரூ.1.70 கோடி மதிப்பில் எதிர் சவ்வூடு பரவுதல் முறை சாதனம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை அமைப்பு ஏற்படுத்தியதன் மூலம் ஆலை சாயமிட பயன்படுத்தும் நீர் முழுவதனையும் மறு உபயோகம் செய்கிறது. இதன் மூலம் ஆலையில் இருந்து சாயக்கழிவு நீர் சிறிதும் வெளியேற்றா நிலையை (Zero Discharge) கடைப்பிடிக்கப்பட்டு சுற்றுச் சூழல் பாதுகாக்கப்படுகிறது.

**2010–2011 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டம்**

(i) இந்நிறுவனம் உற்பத்தி மற்றும் தரத்தை மேம்படுத்த தற்போதுள்ள இயந்திரங்கள் மற்றும் கருவிகளை மாற்றி ரூ.80.00 இலட்சம் செலவில் நவீனப்படுத்த திட்டமிட்டுள்ளது.

(ii) இந்நிறுவனம் ISO 14001 தரச் சான்றிதழை பெற திட்டமிட்டுள்ளது.

## 14. தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலைகளின் இணையம் (டான்ஸ்பின்)

கூட்டுறவு நூற்பாலைகளின் பஞ்சு கொள்முதல் நடைமுறையினை நெறிப்படுத்தும் பொருட்டு தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலைகளின் இணையம் (டான்ஸ்பின்) 1994 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இவ்விணையத்தின் உறுப்பினராக உள்ள கூட்டுறவு நூற்பாலைகளுக்கு தேவையான தரமான பஞ்சினை நியாய விலையில் கொள்முதல் செய்து விநியோகிப்பதே இதன் நோக்கமாகும். இதற்காக தமிழக அரசு பங்கு மூலதனமாக ரூ.25.00 கோடியும், பஞ்சு சுழற்சி நிதியாக ரூ.2.07 கோடியும் ரொக்கத்திற்கு பஞ்சு வாங்கும் பொருட்டு இணையத்திற்கு வழங்கியுள்ளது.

### 2009–2010 ஆம் ஆண்டில் செயலாக்கம்

2009–2010 ஆம் ஆண்டில் டான்ஸ்பின் நிறுவனம் 13700 பேல்கள் பஞ்சினை ரூ.14.94 கோடி மதிப்பிற்கு கொள்முதல் செய்து 5 கூட்டுறவு நூற்பாலைகளுக்கு



விநியோகம் செய்துள்ளது. டான்ஸ்பின் நிறுவனம் 2009–2010 ஆம் ஆண்டில் ரூ.7.60 இலட்சம் நிகர இலாபம் ஈட்டும் என கணக்கிடப்பட்டுள்ளது.

## 15. 2010–2011 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட ஒதுக்கீடு

''கைத்தறி மற்றும் துணிநூல்'' மானியக் கோரிக்கை எண்.17–ன் கீழ், 2010-2011 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ. 85518.77 இலட்சம் பின்வரும் விவரப்படி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது :-

| வ. எண் | திட்டத்தின் பெயர் | வரவு செலவு திட்ட ஒதுக்கீடு **2010–2011** (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | இலவச வேட்டிகள் மற்றும் சேலைகள் வழங்கும் திட்டம் | 25600.00 |
| 2 | இலவச வேட்டி சேலைத் திட்டத்தின் கீழ் கையாளும் தொகை | 1280.00 |
| 3 | கைத்தறி நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம் வழங்குதல் | 1120.00 |
| 4 | விசைத்தறி நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம் வழங்குதல் | 6684.00 |
| 5 | கைத்தறித் துணி விற்பனைக்குத் தள்ளுபடி | 4000.00 |
| 6 | ஒருங்கிணைந்த கைத்தறி வளர்ச்சித் திட்டத்தின் கீழ் விற்பனை ஊக்குவிப்பு/தள்ளுபடி | 7800.00 |
| 7 | ஒருங்கிணைந்த கைத்தறி வளர்ச்சித் திட்டத்தின் கீழ் குழும வளர்ச்சித் திட்டம் | 1000.00 |
| 8 | ஒருங்கிணைந்த கைத்தறி வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கைத்தறிகளை மேம்படுத்த குழு அணுகுமுறை | 1000.00 |



| வ. எண் | திட்டத்தின் பெயர் | வரவு செலவு திட்ட ஒதுக்கீடு **2010–2011** (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 9 | கூட்டுறவு கைத்தறி நெசவாளர்கள் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம் | 500.00 |
| 10 | கைத்தறி நெசவாளர்களுக்கான நல்வாழ்வு காப்பீட்டுத் திட்டம் | 417.39 |
| 11 | மகாத்மா காந்தி புங்கர் பீமா திட்டத்தின் கீழ் காப்பீட்டுக் கட்டணம் செலுத்துதல் | 201.78 |
| 12 | கூட்டுறவு கைத்தறி நெசவாளர்களுக்கான முதியோர் ஓய்வூதியத் திட்டம் / குடும்ப ஓய்வூதியத் திட்டம் | 500.00 |
| 13 | பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வட்டி மானியம் | 1300.00 |
| 14 | திருப்பூரில் பூஜ்ஜிய கழிவு வெளியேற்றும் அமைப்பு – உதவித் தொகை | 32000.00 |
| 15 | கடல்சார் கழிவு வெளியேற்று திட்டம் | 0.01 |
| 16 | விசைத்தறி நெசவாளர் நல வாரியத்திற்கு உதவி | 100.00 |
| 17 | ஹட்கோ கடனை தள்ளுபடி செய்தல் | 300.00 |
| 18 | ஈரோட்டில் உள்ள கைத்தறி நெசவாளர் பயிற்சி மையத்திற்கான நிர்வாகச் செலவுகள் | 20.64 |
| 19 | "டெக்ஸ்கோ" நிறுவனத்திற்கு நிலுவையினை வழங்க கூட்டுறவு நூற்பாலைகளுக்கு வழிவகைக் கடன் | 0.01 |
| 20 | நெசவாளர் மற்றும் வடிவமைப்பாளர் திட்டம் | 15.00 |

| வ. எண் | திட்டத்தின் பெயர் | வரவு செலவு திட்ட ஒதுக்கீடு **2010–2011** (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 21 | புதிய வடிவமைப்புகளை உருவாக்க நிதியுதவி | 15.00 |
| 22 | புதிய ஈப்பு ஊர்தி நாகர்கோவில் சரகத்திற்கு வாங்குதல் | 5.00 |
| 23 | சரக அலுவலகங்களுக்கு 10 ஒளி நகலிகள் வழங்குதல் | 5.50 |
| 24 | தீன்தயாள் உறத்கர்கா புரோட்சகான் யோஜனா திட்டம் | 0.04 |
| 25 | விசைத்தறிக் கணக்கெடுப்பு (ஈரோடு விசைத்தறி சேவை மையத்திற்கான வாடகை) | 0.25 |
| 26 | அமலாக்கப் பிரிவின் நிர்வாகச் செலவு | 93.85 |
| 27 | நிர்வாகச் செலவுகள் (பணியாளர்களின் சம்பளம் மற்றும் இதர படிகள்) | 1380.96 |
| 28 | தலைமைச் செயலக பொருளாதாரப் பணிகள் (பணியாளர்களின் சம்பளம் மற்றும் நிர்வாகச் செலவுகள்) | 179.34 |
| மொத்தம் | | **85518.77** |

**கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்**
**பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர்**